தமிழக இறைமக்களின் தனிப்பெரும் வார இதழான 'நம் வாழ்வு' வெளியிடும்

# இதுவும் கடந்து போகும்

## புனித வெள்ளி சிலுவைப்பாதை



**கொரோனா நோய்த்தொற்றுப் பின்னணியில் செபச்சிந்தனை**

இது
'நம் வாழ்வு'-ன்
விலையில்லா பரிசு
visit now
www.namvazhvu.in

## குடந்தை ஞானி

நம் வாழ்வு
வெளியீடு

# இதுவும் கடந்து போகும்

## புனித வெள்ளி சிலுவைப்பாதை


ஆசிரியர்

நம் வாழ்வு

**குடந்தை ஞானி**



**நம் வாழ்வு**

வெளியீடு

62 (153), லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர், சென்னை - 600 004

# நம் வாழ்வு

வெளியீடு : 82 (டிஜிட்டல்)

- நூலின் பெயர் : **இதுவும் கடந்து போகும்**
- ஆசிரியர் : குடந்தை ஞானி
- டிஜிட்டல் முதல் பதிப்பு : ஏப்ரல் 09, 2020.
- மொழி : தமிழ்
- பக்கங்கள் : 60
- விலை : நம் வாழ்வு சந்தாதாரர் ஆவது/விலையில்லை
- ISBN No. : 978-81-941643-57
- கிடைக்குமிடம் : **நம் வாழ்வு,** 62, லஸ் சர்ச் ரோடு,
  மயிலாப்பூர், சென்னை - 600004.
  **Email : editor@namvazhvu.in**
  **94 980 3 224 4** (நம் வாழ்வு வாட்ஸ்அப்)

- புத்தக ஆக்கமும் வடிவமைப்பும் : நம் வாழ்வு கிராபிக்ஸ் & டிசைன்ஸ்

- அறிவிப்பு

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளர் மற்றும் ஆசிரியரின் எழுத்துப் பூர்வமான முன் அனுமதியின்றி மின்னணு மற்றும் முகநூல், வாட்ஸ் ஆப் உள்ளிட்ட வேறெந்த சமூக ஊடகங்களில் மறுபதிப்புச் செய்யவும், பகிர்ந்து கொள்ளவும், பரப்புரை செய்யவும், தற்காலிகமாக **2020** ஆம் ஆண்டு அனுமதிக்கப்படுகிறது.

கொரோனோ தொற்றுநோய் காரணமாக தமிழகத் திருஅவை முடங்கியுள்ள நிலையில் குருக்களின்றி இல்லங்களில் அனைவரும் செபிக்கவும் புனித வாரத்தை அருளுள்ள முறையில் கொண்டாடவும் இந்நூலை 'நம் வாழ்வு' அழகிய E-Book வடிவில் வெளியிடுகிறது. தங்கள் ஒத்துழைப்புக்கு மிக்க நன்றி!

# வேண்டுகோள்

## உங்களுக்கு உதவும் எங்களுக்கு உதவுங்கள். இறைவன் உங்கள் குடும்பத்தை ஆசிர்வதிப்பார்.

கிறிஸ்தவர்களே! மதவாதமும் பெரும்பான்மைவாதமும் தலைதூக்கும் இவ்வேளையில் சிறுபான்மையினராகிய நமக்கு உள்ள ஒரே அச்சு ஊடகம் 'நம் வாழ்வு' மட்டுமே! உலக அளவில் கிறிஸ்தவர்களுக்கென்று உள்ள ஒரே வார இதழ் நமது ''நம் வாழ்வு' மட்டுமே! இதை நீங்கள் ஆதரிக்காவிடில் யார் இதனை ஆதரிப்பார்? தமிழகத்தில் உள்ள 1493 பங்குகளில் 8 லட்சம் குடும்பங்கள் உள்ளன. ஆனால் வெறும் 15 ஆயிரம் குடும்பங்கள் மட்டுமே 'நம் வாழ்வு' சந்தாதாரராக உள்ளனர். இது நியாயமா? **நீங்கள், உங்கள் குடும்பத்தார் முதலில் சந்தாதாரராகி,** உங்கள் ஊரில், பங்கில், தெருவில், ஏன் உங்கள் உறவினர்களில் ஒருவரைப் புதிய சந்தாதாரராக அறிமுகப்படுத்தி உதவுங்கள். திருமுழுக்கு, முதல் திருவிருந்து, உறுதிபூசுதல், திருமணம் ஆகிய அருளடையாளக் கொண்டாட்டங்களில் 'நம் வாழ்வை'ப் பரிசாக அளிக்கலாம்.

ஒவ்வொரு கிறிஸ்தவக் குடும்பத்திற்கும் **'நம் வாழ்வு'** குடும்ப விளக்காக இருந்து நல்வழி காட்டும், நல்வழிப்படுத்தும். கிறிஸ்தவர்களே! இது ஒருங்கிணைய வேண்டியத் தருணம். இதுவே காலம்! இதுவே நேரம்! ஆன்மிகத்தையும், அரசியலையும் ஒருசேரக் குழைத்து அமுதாகத் தரும் 'நம் வாழ்வு', சமுதாயத்தில் உள்ள நஞ்சை வேரறுக்கும்; நல் நிலத்தில் விழுந்த விதையாய் 60 மடங்கு 100 மடங்கு பலன் தரும். எனவே, நீங்களே சந்தாதாராகி, எங்கள் பத்திரிகைப் பணிக்கு உதவுங்கள். சந்தாதாராக **www.namvazhvu.in** என்ற எம்முடைய இணையதளத்தில் 'ஆன்லைன்' மூலம் பணம் செலுத்தி சந்தாதாரர் ஆகலாம்.. மேலும் விவரங்களுக்கு இப்புத்தகத்தில் உள்ள படிவத்தைப் பார்க்கவும். மிக்க நன்றி!

Scan these QR codes for Subscription.

for Online Subscription Renewal

Amazon Pay
Google Pay
Paytm
Phone Pe
BHIM

AMZN0000286547@apl

Facebook

# சமர்ப்பணம்

கொரோனா நோய்த் தொற்றிலிருந்து
மக்களைக் காப்பாற்றிட, தங்கள்
உயிரையே பணயம் வைத்துப்
போராடும் மருத்துவர்கள்,
செவிலியர்கள் மற்றும்
தூய்மைப் பணியாளர்களுக்கு.....

# ஆசிரியர் உரை

**க**த்தோலிக்க திருஅவையின் தவக்காலப் பக்தி முயற்சிகளில் மிகவும் முக்கியமானது சிலுவைப்பாதை பக்தி முயற்சியாகும். பாரம்பரிய முறையில் செபிக்கப்படும் சிலுவைப்பாதையை, கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்டு வீடுகளில் முடங்கியுள்ள இந்தச் சூழ்நிலையில், நம் நடைமுறை வாழ்க்கையோடு ஒப்பிட்டு, சிந்தித்து, செயலாக்கத்திற்கு வழிவகுப்பது மிகவும் அவசியம். அந்த வகையில், 'இதுவும் கடந்து போகும்' என்ற தலைப்பிலான இந்தச் சிலுவைப்பாதை, ஆழமானச் சிந்தனையை நம்முள் விதைத்து, இயேசுவின் பாடுகளோடு ஒன்றித்து, நாம் அவரோடு உயிர்ப்பில் பங்குபெற களம் அமைத்துக் கொடுக்கிறது. இதுவும் கடந்து போகும் என்ற நம்பிக்கையை நமக்குள் விதைத்து, கிறிஸ்துவுக்குள் புதுப்பிறப்பு அடைய பேருதவி புரிகிறது. கொரோனா நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் அழுகுரலுக்கும் புலம்பலுக்கும் செவி சாய்த்து, மக்கள் இறையியலை அனுபவ வாழ்விலிருந்து கற்பிக்கிறது. இச்சிலுவைப் பாதை நம் மனதோடு பேசி, நம் குறைகளைக் களைந்து, நம்மைப் புனிதராக்க நெறிப்படுத்துகிறது.

'பாஸ்கா' என்றால் 'கடத்தல்' என்று பொருள். 'கிறிஸ்துவின் பாஸ்கா' என்பது அவர்தம் பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பை உள்ளடக்கியது. சிலுவைப் பாதை என்பது கிறிஸ்துவின் பாஸ்காப் பாதையாகும். 'இதுவும் கடந்து

போகும்’ என்று தலைப்பில் தொகுக்கப்பட்டுள்ள, இந்தச் சிலுவைப்பாதை அடங்கிய டிஜிட்டல் நூல், நம்மை நமது சுயநலத்திலிருந்து பொது நலத்திற்கும், பாவ வாழ்விலிருந்து புண்ணிய வாழ்விற்கும், இருளிலிருந்து ஒளிக்கும், சாவிலிருந்து சாகாமைக்கும், நம்மைக் கரம் பிடித்து இட்டுச் செல்லும். இப்புனித வாரத்தில் மனிதராகிய நம்மைப் புனிதராக்க முயற்சிக்கும் இந்நூலை நாம் வாசித்து, சிந்தித்து, செபித்து, நமக்குள் ஓர் உள்முகப் பயணம் மேற்கொள்வோம். இந்நூலை ‘நம் வாழ்வு’ வெளியிடு தமிழ்க்கூறும் நல்லுலகிற்கு டிஜிட்டல் முறையில் படைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறது. நம் இவ்வுலகப் பயணத்தைக் கடந்திட, இந்நூல் ஒரு வழிப்பயணக் கையேடாக நம் கரங்களில் இருக்கட்டும்.

குடந்தை ஞானி
நம் வாழ்வு ஆசிரியர்.

# சிலுவைப் பாதை

## பீடத்துக்கு முன்பாக

**வழிநடத்துபவர்** : தந்தை மகன் தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்.

அனைவரும் : இறையாட்சியை உமது வாழ்வால் வாழ்ந்துக் காட்டிய இயேசுவே! நீர் விரும்பும் இறையாட்சியை எங்களது சொல்லாலும், செயலாலும் வாழ்வாக்காத தருணங்களை நினைத்து மனம் வருந்துகிறோம். உமது பாதையில் உம்மோடு சேர்ந்து பயணிக்க விருக்கின்ற நாங்கள் உமது நோக்கத்தைப் புரிந்தவர்களாய், இறையாட்சியின் மதிப்பீடு களை இவ்வுலகிற்கு எடுத்துச்செல்லக்கூடிய கருவிகளாக எங்களை உருவாக்கிடும் - ஆமென்

### சுருக்கமான மனத்துயர் மன்றாட்டு

என் இறைவா! நன்மை நிறைந்தவர் நீர். அனைத்திற்கும் மேலாக அன்புக்கு உரியவரும் நீரே. என் பாவங்களால் உம்மை மனநோகச் செய்து விட்டேன். ஆகவே நான் குற்றங்கள் பல செய்தேன் எனவும், நன்மைகள் பல செய்யத் தவறினேன் எனவும் மனம் நொந்து வருந்துகிறேன். உமது அருள் துணையால் நான் மனம் திரும்பி, இனிமேல் பாவம் செய்வதில்லை என்றும், பாவத்துக்கு ஏதுவான சூழ்நிலைகளை விட்டு

விலகுவேன் என்றும் உறுதி கூறுகிறேன். எங்கள் மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பாடுகளின் பயனாக, இறைவா, என்மேல் இரக்கமாயிரும் ஆமென்.

## ஒவ்வொரு சிலுவைப் பாதை நிலைக்கு முன்..

**வழிநடத்துபவர்** : இறை இயேசுவே, உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றி செலுத்துகின்றோம்.

அனைவரும் : ஏனெனில் புனித பாரமான சிலுவையைக் கொண்டு உலகத்தை மீட்டீர்.

## ஒவ்வொரு சிலுவைப்பாதை நிலைக்குப் பின்..

**வழிநடத்துபவர்** : எங்கள் பேரில் இரக்கமாயிரும், ஆண்டவரே இரக்கமாயிரும்.

அனைவரும் : எங்கள் பேரில் தயவாயிரும் சுவாமி எங்கள் பேரில் தயவாயிரும்.

**வழிநடத்துபவர்** : இறந்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் அமைதியில் இளைப்பாறுவனவாக.

அனைவரும் : ஆமென்.

# இதுவும் கடந்து போகும்

**குடந்தை ஞானி**

*அன்புள்ள சகோதர சகோதரிகளே,*

**அ**கில உலக கத்தோலிக்கத் திருஅவையே இந்தப் ‘புனித வெள்ளி’யைச் முற்றிலும் வேறுபட்ட வெள்ளியாக அனுபவித்துக் கொண்டிருக்கிறது. 135க்கும் மேற்பட்ட நாடுகளில் பதினைந்து இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் ‘கொரோனா’ என்னும் பெருந்தொற்று ஆட்கொல்லி நோயால் பாதிக்கப்பட்டு, மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கின்றனர். இதுவரை 85 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இறந்துள்ளனர்.

*எங்கும் மரண ஓலம்!*
*கண்ணீரும் கம்பலையுமாக உறவினர்கள்!*
*நம் எல்லாரையுமே மரண பயம் சூழ்ந்திருக்கிறது.*
*இன்று, மரணத்தின் வாசலில் உலகம் போரடிக் கொண்டிருக்கிறது.*
*கல்லறைகளின் நுழைவாயிலில் படைப்பு காத்திருக்கிறது.*
*கல்விநிலையங்கள் மட்டுமல்ல, அனைத்து வழிபாட்டுத்தலங்களும் மூ டப்பட்டுள்ளன.*
*அணுஆயுதங்கள் வைத்திருக்கும் வல்லரசுகளே தம் நாட்டு மக்களைக் காக்க மருத்துவத்தையும் மருந்துகளையும் கையெடுத்து கும்பிட்டு, கெஞ்சும் நிலை!*
*பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட சாவுகள்!*
*அடக்கம் செய்வதற்குக் கூட ஆளில்லாத அவலநிலை.*

*கல்லறைகள் நிரம்பி வழிகின்றன.*
*சாலையோரங்களில் சவப்பெட்டிகள் அடக்கம் செய்யப்பட காத்திருக்கின்றன.*
*மயானத்தை நோக்கிய மரண சாலையில் நம் மனது அலைபாய்கிறது.*
*நம்பிக்கை எவரிடமும் இல்லை.*
*உயிரைப் பணயம்வைத்து பல்லாயிரக்கணக்கான மருத்துவர்களும் செவிலியர்களும் தூய்மைப் பணியாளர்களும் மருத்துவமனைகளில் பேராடிக் கொண்டேயிருக்கின்றனர்.*
*எங்கும் விரக்தியும் பயமும் விரவியிருக்கின்றன.*
*ஆம்! எதிர்காலம் பற்றிய நம்பிக்கை இல்லை.*
*ஊரடங்கு மட்டுமல்ல.. உள்ளங்களும் அடங்கியே கிடக்கின்றன.*
*ஏன் இந்தத் துயரம்? ஏன் இந்த கையறுநிலை? ஏன் இந்தப் பயம்?*
*'கொரோனா' இந்தப் பெயர் உலகமெங்கும் ஒரு விநாடியில் ஓராயிரம் முறை உச்சரிக்கப்படுவது ஏன்?*
*இந்தப் பின்னணியோடு இயேசுவின் கல்வாரிப் பாதையில் நாம் அடியெடுத்து வைப்போம்?*
*துக்கத்தோடும் துயரத்தோடும்*
*விக்கலோடும் விம்மலோடும்*
*கண்ணீரோடும் கம்பலையோடும்*
*இரத்தத்தோடும் துணியோடும்*
*கசையடியோடும் புளித்த காடியோடும்*
*சிலுவையோடும் முள்முடியோடும்*
*காயங்களோடும் இரு கள்வர்களோடும்*
*கல்வோரி நோக்கிய இந்த மரணப்பாதையில் ..*
*ஆம்! சிலுவைப் பாதையில்...*
*மரியாயும் சீமோனும்*
*வெரோணிக்காவும் இயேசுவின் அன்பு ச் சீடரும்,*
*எருசலேம் பெண்களும் நிக்கோதோமுவும்*
*கண்ணீர் சிந்திய நூற்றுவர்தலைவனும் தீஸ்மாஸ் என்று நல்லக் கள்ளனும்*
*நமக்கு நம் நம்பிக்கை நங்கூரங்களாகத் தென்படுகின்றனர்.*
*எதிர்மறை சிந்தனைகளை நம்முள்ளே புதைத்துவிட்டு, 'இதுவும் கடந்து போகும்' என்ற விசுவாச விதைகளை மட்டுமே நம் கைக்கொண்டு, 'உயிர்ப்பு' நோக்கிய உயரியப் பாதையாக இந்தப் பாதையை அமைத்திடுவோம்.*

◀ நம் வாழ்வு ஆசிரியர் **குடந்தை ஞானி** ▶

*இது தோல்வியின் பாதையல்ல.. இது வெற்றியின் பாதை!*
*இது துயரத்தின் பாதையல்ல.. இது சிகரத்தின் பாதை!*
*இது மரணத்தின் பாதையல்ல.. இது உயிர்ப்பின் பாதை!*
*இது துரோகத்தின் பாதையல்ல.. இது அன்பின் பாதை!*
*இது விரக்தியின் பாதையல்ல.. இது தோழமையின் பாதை!*
*இது அதிகாரத்தின் பாதையல்ல.. இது அன்பின் பாதை!*
*இது வீழ்ச்சியின் பாதையல்ல. இது எழுச்சியின் பாதை!*
*இது யூதாசின் பாதையல்ல.. இது இயேசுவின் பாதை!*
*இது பிலாத்துவால் தீர்மானிக்கப்பட்ட பாதையல்ல..*
*இது தந்தையின் திருவுளம் நிறைவேற்ற தாமே முன்வந்து,*
*துன்புறும் ஊழியனாய் இயேசு தீர்மானித்தப் பாதை..*
*வாருங்கள்....நாமும் நம் சிலுவைகளுடன்*
*இயேசுவைப் பின்செல்லும் சீடர்களாய் பயணிப்போம்!*

**முதல் நிலை**

# இயேசு தீர்ப்பிடப்படுகிறார்

## "சிலுவை"



'இதோ மனிதன்!' இது பிலாத்து எழுதிய தீர்ப்பு. இவன் பொருட்டு நான் குற்றமற்றவன் கைக் கழுவிய பிலாத்து எழுதிய தீர்ப்பு. 'இவனைச் சிலுவையில் அறையும்.. சிலுவையின் அறையும்!' என்று, அன்று மக்கள் தங்களுக்குத் தாங்களே எழுதிய தீர்ப்பு.

நன்மைக்கும் தீமைக்கும் இடையி லானப் வாழ்க்கைப் போராட்டத்தில் இயேசுவுக்கும் பரபாசுக்கும் இடையி லான சார்புநிலைப் போராட்டத்தில்.. தீமையை ஆதரித்தது அந்த

மக்கட்கூட்டம்.

'எங்கள் மேலும் எங்கள் தலைமுறைமேலும் இந்தப் பழி இருந்துவிட்டுப் போகட்டும்!' என்று எகத்தாளதாய் பொறுப்பற்று நடந்து கொண்டது அந்தப் பொல்லாத மக்கட்கூட்டம்.

அன்று, 'நாசரேத்தூர் இயேசு யூதர்களின் அரசன்'தான் என்று பிலாத்து எழுதிய அரசியல் சாசனம்தான்.. கிறிஸ்தவ வரலாற்றின் எழுதப்பட்ட முதல் நம்பிக்கை அறிக்கை.

'எழுதியது எழுதியதுதான்' என்று சான்றுபகர்ந்ததுதான் நற்செய்திக் கெல்லாம் மிகச் சிறந்த முன்னுரை.

'சிலுவை!'..இயேசுவைப்பொறுத்தவரைசிம்மாசனம்தான்.

கல்வாரி சிலுவையின் நிழல் பெத்லேகேமின் மாட்டுத் தொழுவத்திலும்அன்றேபடிந்திருந்ததுஎன்பதைஅவர்அறிவார். மூவரில் ஒரு ஞானி பரிசளித்த வெள்ளைப்போளத்தின் கசப்பை தாய்ப்பாலின் சுவையோடே உணர்ந்திருப்பார் போலும்..

ஆகையால்தான் 'என்னை பின்செல்ல விரும்பும் எவரும் தன்னையே மறுத்து, தன் சிலுவையைச் சுமந்து கொண்டு வரட்டும்!' என்று சீடத்துவத்தைச் செதுக்கியிருந்தார்.

இந்தச் சிலுவையை தன் வாழ்நாளெல்லாம் சுமந்தவர், கெத்சமேனியில், இரத்த வியர்வை வியர்த்து, தம் மனித பலவீனத்தின் வழியாக வெளிப்படுத்தியிருந்தார்.

தந்தை பூரிப்படைந்த இந்த அன்பார்ந்த மகன் இயேசு, 'உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகிறேன்' துன்புறும் ஊழியனாக, தன்னைச் சுமக்கப் போகும் சிலுவையை தானே மனமுவந்து முத்திட்டு முதுகில் சுமக்கிறார்.

இன்று உலகம் கோவிட்-19 என்னும் மிகப் பாரமான சிலுவையை சுமந்து கொண்டிருக்கிறது.

கெத்சமேனி அனுபவத்தை அனைத்து உலக நாடுகளும் ஒருசேர அனுபவித்து கொண்டிருக்கின்றன.

இந்தச் சிலுவையின் பாரம் மிகக் கொடுமையானது.

400 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் நான்கு சுவர்களுக்குள் முடங்கியிருக்கின்றனர்.

மரண ஓலமும் ஒப்பாரியும் எங்கும் எதிரொலிக்கிறது.

கனத்த இதயமும் கையறுநிலையும் தென்படுகிறது.

அடக்கம் செய்வதற்கு முன்பாக ஆசையாகக் கூட இறந்தவரை அணைக்க முடியவில்லை.

இறந்த பெற்றோரின், கணவரின், மனைவியின் உறவினரின் முகத்தைக்கூட பார்க்க முடியவில்லை.

இந்த உலகில் எந்தத் தொட்டிலும் 'எப்போது?' என்று கேட்கவில்லை. கல்லறைகள் மட்டுமே 'எங்கே?' எங்கே?' என்று கொக்கரித்துக் கொண்டிருக்கின்றன.

நாம் அழுவாரோடு அழவும் ஒப்பாரி வைப்பவரோடு மாரடிக்கவும் அழைக்கப்படுகிறோம்.

'சிலுவை' இது எல்லாருக்குமானதுதான்.

கொரோனாவைப்போலவே இதற்கு சாதி, மதம், மொழி, இனம் பார்ப்பதில்லை.

இது அவமானத்தின் சின்னமல்ல.. இது நம்பிக்கையின் சின்னம். சிலுவை..இது ஞானத்தின் உறைவிடம். பாலைவனத்து வெண்கலப்பாம்பைப் போல கடிபட்டவர்களையும் கஷ்டப் படுபவர்களையும் குணப்படுத்தும்.

இந்த உலகம் இந்தத் தொற்று நோய்க்கு உரிய மருந்தைக் கண்டுபிடித்து, தன்னைத்தானே உயிர்ப்பித்துக் கொள்ளும்.

இதுவும் கடந்து போகும்!'. இந்தப் படைப்பு நிச்சயம் வெல்லும்.

**சிந்தனை**

*கொரோனோ நோய்த்தொற்று உனக்கு கற்பிக்கின்ற பாடம் என்ன?*

*இந்த மானுட வாழ்வை எப்படி நீ வரையறுக்கிறாய்?*
*வாழ்க்கை மீது உனக்கு பிடிப்பு ஏற்பட்டுள்ளதா?*

**செபம்**

இயேசுவே! நீர் ஆரத்தழுவி ஏற்றுக்கொண்டு இந்தச் சிலுவைமரம் எம் ஆதிப்பெற்றோரின் கீழ்படியாமைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. மூன்று ஆணிகளுக்குள் தொங்கிய உம்மை தாங்கி எம் மீட்பின் சின்னமாக விளங்குகிறது. மரணத்தின் விளிம்பில் எங்களுக்கு பாடம் கற்பிக்கிறது. கொரோனா நோய்த்தொற்று மிகப்பெரிய பாடமாக அமைந்து, இந்தப் படைப்பு படைத்தவனிடம் சரணாகதி அடையவும் சக படைப்பை நேசிக்கவும் கற்றுத் தருவதாக. ஆமென். ஆமென்.

## இரண்டாம் நிலை

# இயேசு சிலுவையைத் தோளில் ஏற்கிறார்

### “கொரானோ நோயாளிகள்”



இயேசு, பாரமான சிலுவையைத் தன் தோளில் ஏற்கிறார்.

கற்றூணில் கட்டி வைக்கப்பட்டு கொடுக்கப்பட்ட சாட்டையடிகள் அவரது தோளைத் துளைத்திருக்கின்றன. சிரசில் சூட்டப்பட்ட முள்முடி உலகத்தின் பார்வைக்கு ஏளனமாகத் தோன்றுகிறது.

மேனியெங்கும் வழிந்தோடும் இரத்தம் கொடூரத்தின் உச்சம். முகம் பொலிவிழந்து, கரங்கள் வலுவிழந்து, கால்கள் தடுமாற இயேசு மரணத்தின் பாதையில் முதல் அடியை எடுத்து வைக்கிறார்.

எங்கும் ஏளனப் பார்வைகள்! எகத்தாளமான ஏச்சும் பேச்சும் எதிரொலிக்கின்றன.

மிகப் பெரிய விரக்தி.

நிரப்ப முடியாத வெற்றிடம்.

உடலின் காயங்களோடு உள்ளத்திலும் மறுதலித்த, காட்டிக்கொடுக்கப்பட்ட காயங்கள்!

கொல்கொதோ பாதை மிகக் கொடுமையானப் பாதையாகவே தென்படுகிறது. தனியொரு ஆளாய் இந்தப் பாரமான சிலுவையைச் சுமந்து செல்லமுடியுமா?' என்ற நம்பிக்கை இயேசுவுக்கு மட்டுமல்ல.. அங்கிருந்து காவலர்களுக்குமே இருந்தது.

அச்சுறுத்தி, சதையைப் பதம் பார்த்து அடிபணியவைக்கும் சாட்டைகளோடு நடமாடும் காவலர்கள்.

ஆம்! செம்மறியைச் சூழ்ந்து கொண்டன அந்த ஓநாய்கள்.

கொரோனா நோயாளிகள்.. அவர்களும் தனியொரு ஆளாக இந்தச் சிலுவையைச் சுமக்கின்றனர்.

'தனிமை' அவர்களை வாட்டுகிறது.

'மரணத்தின் நிழல்' அவர்களை மாலை நேரத்து நிழலைப்போல நீண்டு அச்சுறுத்துகிறது.

'மருந்தின்மை' அவர்களுக்கு பீதியை ஏற்படுத்துகிறது. 'சமூக விலகலும்' 'தனித்திருத்தலும்' 'நான் யார்?' 'ஏன் இந்த வாழ்க்கை?' என்று கேள்விகளை எனக்குள் எழுப்புகின்றன.

மாபெரும் துயரநிலை.

போதுமான மருத்துவ வசதிகள் இல்லை.

அருகிலிருக்க எவருக்கும் துணிச்சலில்லை.

நாயினும்கீழாகவே மிதிக்கப்படுகிறது மானுடம்.

சிறை வாழ்க்கையைவிட கொடுமையான அனுபவம்.

மரண ஓலம்!.

கண்ணீர் துளிகளும் விசும்பல்களும்..நுரையீரல் இறுக்கப்பட்டு மரணத்தின் வாசலில் மூச்சை முட்டி உள்ளிழுக்கப் போராடும் நோயாளியின் இறுதி மணித்துளிகள்..

அடக்கத்தின் போதுகூட அழுவதற்கு ஆட்களில்லாமல் ஐந்நான்கு பேராடு மரணக்குழிக்குள் வீசப்படும் சடலங்கள்.

இது மானுட துயரத்தின் உச்சம். நம் தலைமுறைக்குப் பாடம்.

ஆம். அனைத்தையும் துச்சமென கருதும் நம் கால தலைமுறைக்கு கொரானோ தரும் வாழ்க்கைப் பாடம்.

**சிந்தனை**

*கொரோனா நோயளிகளை நீ அன்புச் செய்கிறாயா? எப்படி?*
*கொரோனா உனக்கும் உன் குடும்பத்தாருக்கும் தொற்றாமல் இருக்கு நீ எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன?*
*பொதுச் சுகாதாரத்தை நீ பேணுவது எப்படி?*

**செபம்**

சுமை சுமந்து சோர்ந்திருப்போரே, எல்லாரும் என்னிடம் வாருங்கள் என எங்களை அரவணைத்த அன்பு தெய்வமே, கொரோனோ நோய்த்தொற்று ஏற்பட்டு, மரணத்தின் வாயிலில் போராடிக் கொண்டிருக்கும் உலக நோயாளிகள் அனைவரையும் உம் பாதம் ஒப்புக் கொடுத்து செபிக்கிறேன். சாவின் விளிம்பில் போராடிக்

கொண்டிருக்கும் அவர்களுக்கு நம்பிக்கை தந்து, அவர்கள் மரணத்தை வெல்ல வரம் தாரும். - ஆமென்.

**மூன்றாம் நிலை**

# இயேசுவின் முதல் முறை கீழே விழுகிறார்

## “ படைப்பு”

இயேசு முதல் முறையாக கீழே விழுகிறார்.

பாரமான சிலுவை தந்த அழுத்தம்,



பாதையில் கிடந்த கற்களின் சீற்றம்,

இன்னும்வேகமாகநடஎன்று மேனில் விழுந்த சாட்டையின் கோபம், பசி, தாகம், களைப்பு. உடல் தளர்ச்சி, தூக்கமின்மை, நன்றியின்மை, துரோகம், .. என அனைத்தும் இயேசுவை பாரமான சிலுவையோடு இந்த மரணப்பாதையில் கீழே விழ வைத்தது.

இது வீழ்ச்சிதான். ‘இது எழுச்சி’ என்று வீர வசனம் பேச மனது துணியவில்லை. துயரத்தோடு மற்றுமொரு துயரம்.

சீனாவின் வூகான் மாகாணம்.

இந்தக் கொரோனா பெருந்தொற்றின் கருவறை.

கருவறை என்பதைவிட கல்லறை என்றுதான் சொல்ல வேண்டும். காலங் காலமாகவே இந்த மானுடத்தைத் தொற்றுநோய்கள் சூறையாடியிருக்கின்றன.

ஸ்பானிஷ் காய்ச்சல், ஆசியன் இன்புளுவென்சா, ரஷ்யன் ஃப்புளு, சார்ஸ் (SARS), மெர்ஸ்(MERS), ஆன்த்ராக்ஸ், கோவிட் 19 என்று தொடர்ந்து வைரஸ்களின் படையெடுப்பு படைப்பின்மீது இயல்பாகவே உண்டு.

ஒவ்வொரு நோய்த்தொற்றின்போதும் இந்த மானுடம் பாடம் கற்றுக்கொள்ளவில்லை.

'எனது- என்னுடையது' என்ற மமகாரமும் 'நான்' - 'தான்' என்ற அகங்காரமும் சக படைப்பை மேலாதிக்கம் செய்து படையெடுக்க வைத்தது.

'இயற்கை' எப்போதும் தன்னைத்தானே அது சரிசெய்து கொள்ளும். இந்தப் பூமி, இந்தப் படைப்பு சமநிலை இழக்கும்போதெல்லாம் தனக்குத்தானே சிலிர்த்து சரி செய்து கொள்ளும். ஆம்! சரி செய்ய சிலவற்றைக் கொல்லும்.

அத்துமீறி ஆக்கிரமித்த அனைத்தும் அந்தச் சிலிர்த்தலில் சிதைந்து போகும்.

போர்கள் மட்டுமல்ல.. இயற்கைமீதான தாக்குதலும் அழிவையே தரும். இது வரலாற்றுப் பாடம்.

முதல் முறை விழுந்தபோதே இந்த மானுடம் பாடம் கற்றுக்கொண்டிருக்க வேண்டும்.

இந்தக் கொரோனா பாடம் இன்று கற்பிக்கிறது.

டால்பின்கள் வெனிஸ் நகரத்து முகத்துவராங்களில் துள்ளிக் குதிக்கின்றன.

மான்கள் சாலைகளில் பட்டி போட்டிருக்கின்றன.

கடற்கரைகளில் ஆமைகள் லட்சக்கணக்கில் குஞ்சு பொறிக்கின்றன.

புனுகுப் பூனைகள் சாலையின் ஜீப்ரா லைன்களைக் கடந்து போகின்றன.

விமானத்தளத்தில் வாத்துக் குடும்பங்கள் வரிசைக் கட்டுகின்றன.

கொரோனா கங்கையை தூய்மைப்படுத்தி, நொய்யலை தெளிவாக்கியிருக்கிறது.

இயற்கை மீண்டும் உயிர்த்திருக்கிறது. இந்தக் கிரகம் மீண்டும் சமநிலை அடைய முயற்சிக்கிறது.

**சிந்தனை**

***இயற்கையை நீ அசிசி நகரத்து புனித பிரான்சிஸைப் போல நேசிக்கிறாயா? எப்படி?***

***இந்தப் பூமியைப் பாதுகாக்க நீ என்ன செய்திருக்கிறாய்? ஒரு மரமாவது நட்டுப் பாதுகாத்து உருவாக்கியிருக்கிறாயா?***

***இயற்கையைப் பாதுகாக்க நீ மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை என்ன?***

**செபம்**

இயேசுவின் படைப்பின் சிகரமாகிய நானே படைப்பைச் சிதைப்பதற்கு காரணமாகியிருக்கிறேன். இந்தப் படைப்புச் சமநிலையை நிலைப்படுத்தி, இறையாட்சி வானத்துப் பறவைகளுக்கும் வயல்வெளி மலர்களுக்கும் உரியது என்பதை உணர்ந்து வாழ வரம்தாரும்– ஆமென்.

# இயேசு, தன் தாயைச் சந்திக்கிறார்

## "குடும்பம்"



இயேசு, தன்னை ஐயிருத் திங்கள் தன் கருவறையில் சுமந்து, சத்திரத்தில் இடம் கிடைக்காமல் மாடடைக் குடிவில் பெற்றெடுத்து, சீராட்டி, பாராட்டி வளர்த்து,

'உன் இதயத்தை ஒரு வாள் ஊடுருவும்!' என்று சீமோன் இறைவாக்கு முன்னுரைத்தபோதும்/ நெஞ்சம் கலங்காமல்,

'இதோ உமது அடிமை; உமது வார்த்தையின் படியே ஆகட்டும்' என்று கபிரியேல் வானதூதர் வழியாக கடவுளுக்கு வாக்குறுதி தந்ததிலிருந்து கிஞ்சித்தும் பின்வாங்காமல்,

பன்னிருவயதில் எருசேலம் ஆலயத்தில் தந்தையின் இல்லத்தில் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற தாய்மையுடன் வழிகாட்டி,

நாசரேத்தூரின் நாயகியாகி, இன்று கல்வாரிக்கு போகும் இயேசுவை, தன் மகனை, சொல்லெண்ணா வேதனையில் நேருக்கு நேர் சந்திக்கிறார்.

உதவி யாருக்குத் தேவைப்பட்டாலும் ஒடோடி உதவும் நல்ல சாமரியன் அவள்.

உதவுவது இருவகை.

தாமே உதவுவது முதல்வகை.

தம்மால் இயலவில்லையெனில், யாரிடமாவது உதவியைப் பெற்று உதவுவது இரண்டாவது வகை.

தம் உறவினள் எலிசபெத்துக்கு உதவியது முதல்வகை.

கானாவூரில் தண்ணீரைத் திராட்சை இரமாக்க உதவியது இரண்டாவது வகை.

உதவுவதும் உதவியாவதும் அன்னை மரியாவுக்கு கைவந்த கலை. தன் மகனின் நிலை உணர்ந்து,

இங்கே முடிந்தால் உதவவும், உதவியாக ஆகவும் அவள் முன் வருகிறாள்.

அவளின் (கண்)பாவைக்குள் பாசம் பொங்கும்! முகத்தில் அன்பு வழியும். அவள் வார்த்தைகளில் அன்பு கசிந்துருகும்.

இயேசுவுக்கும் மட்டுமல்ல திருஅவைக்கும் அவள் தாயாக விளங்குவதன் இரகசியம் இதுதான்.

மரணத்தின் பாதையில் இயேசுவுக்கும் மட்டுமல்ல.. நமக்கும் நம் அருகிலிருப்பாள்.

ஆகையால்தான் மங்கள வார்த்தை செபத்தில், ‘இப்பொழுதும் எங்கள் மரண வேளையிலும்’ என்று மன்றாடத் துணிகிறோம்.

இந்தச் சந்திப்பு ஒரு குடும்பத்தின் சந்திப்பு.

தாயும் மகனும் உதரத்திற்கு வெளியே சந்திக்கும் உளப்பூர்வமான சந்திப்பு.

கொரோனா தொற்றுநோய்க்கு தடுப்பு மருந்தில்லை. தடுப்பூசியும் இல்லை. மருந்தும் மாத்திரையும் ஓரளவுக்கு

உதவும்.

இந்தப் பெருந்தொற்று பரவாமலிருக்க உள்ள ஒரே தடுப்பு மருந்து நோய்க்கு முன்பு ‘சமூக விலகலும்’ நோய்க்குப் பின் ‘தனித்திருத்தலும்’தான்.

இதனால் விளைந்த மிகப்பபெரிய பலன் ‘நம் குடும்ப உறவுகள்’ வலிமைப்படுத்தப்பட்டதுதான்.

இன்று எல்லாருக்கும் நேரமிருக்கிறது.

கசப்புணர்வை மறந்து, மன்னித்து, மனம் திறந்து ஒருவர் மற்றவரோடு இன்று உரையாடு முடிகிறது. விதி விலக்குகள் உண்டு.

ஒருவர் மற்றவருக்கு உதவி செய்ய முடிகிறது.

இல்லறத்தில் மனைவின் சுமையை கணவன் உணர முடிகிறது. கணவரின் ஆற்றலை மனைவி ஒழுங்குப்படுத்தப் படுகிறது.

பிள்ளைகள் தங்களின் தொப்புள் கொடி உறவைச் சிலாகிக்க முடிகிறது.

எல்லோருக்குள்ளும் அன்பு பூத்திட அருமையான தருணம்.

மன்னிக்க உகந்த மகத்தான நேரம்.

டித்த வார்த்தைகளையும் கொப்பளித்த கோபத்தையும் சீர்மைப்படுத்த கொரோனா தந்த கொடுப்பினை.

கொல்கொதா பாதையில் தாய் மரியாவும் இயேசுவும் சந்தித்த சந்திப்பு இப்படிப்பட்டதுதான். வாழ்க்கைப்பாதையை வசந்தமாக்கும் சந்திப்பு.

உதரமும் உதிரமும் ஒப்புரவாகும் சந்திப்பு. இது உறவின் சந்திப்பு.

### சிந்தனை

*என் குடும்ப உறவு எப்படி இருக்கிறது?*
*நான் சறுக்கிய தருணங்கள் எவை? சாதித்த தருணங்கள் எவை?*
*நான் ஆதிக்க மனப்பான்மையோடு செயல்படுகின்றேனா? மன்னிக்கிற மனப்பான்மையோடு ஒப்புரவு ஏற்படுத்துகின்றேனா?*

### செபம்

அன்னை மரியே! ‘முக வாட்டத்தோடு’ எருசலேம் நோக்கி பயணித்த அந்த எம்மாவுஸ் சீடர்களைப் போல இன்று இந்த மானுடம் மிகுந்த மன வாட்டத்துடன் இந்த வாழ்க்கைப் பாதையில் சோர்ந்திருக்கிறது. ‘இது மாலைநேரம்!’. இருள் சூழும் நேரம். இந்நேரத்தில் எங்களுக்காக உம் திருமகனிடம் பரிந்து பேசி எம் துயர்நிலை போக்கியருளும். ஆமென்.

## ஐந்தாம் நிலை

# சீமோன் இயேசுவின் சிலுவையச் சுமந்து உதவுகிறார்

### “ ஏர்ப் பின்னது உலகம்”



“சீரேனே ஊரைச் சேர்ந்த சீமோன் இயேசுவுக்கு உதவுகிறார்.

சீரேனைச் சேர்ந்த இந்த சீமோன் ஓர் ஏழை விவசாயி.

வயலில் உழைத்து களைத்து, ‘மாலைவேளையில்’ இல்லம் திரும்பும் வேலையில்,

இன்னுமொரு சுமை அவர் மேல் சுமத்தப்படுகிறது.

கலப்பை பிடித்து களைத்துப் போன அவர்தம் கரங்கள் சிலுவையைச் சுமக்க கட்டாயப்படுத்தப்படுகின்றன.

மூட்டை தூக்கிய அவர்தம் தோள்கள் இயேசுவுக்காக இன்று சிலுவைச் சுமக்கின்றன.

வீரர்கள் கட்டாயப்படுத்தியதால் என்றாலும் அதற்கு அவர் தந்த இசைவும் கீழ்ப்படிதலும் ஒரு விவசாயியின் மனப்பான்மையையே பிரதிபலிக்கிறது.

முன்பின் அறியாத இயேசுவுக்கு சீரேனைச் சேர்ந்த சீமோன் உதவியதன் மூலம் இயேசுவின் தோழர்களில் ஒருவராக காலம் முழுவதும் அறியப்படுகிறார். அவர் நமக்கும் தோழர்தான்.

கொரோனாவால் ஏற்பட்ட ஊரடங்கு உத்தரவுக்கு தரப்பட்ட முதல் விலக்கே விவசாயத்திற்குதான்.

ஊரடங்கினாலும் மனிதனுக்கு பசி ஒருபோதும் அடங்காது.

இன்றுதான் ‘சுழன்றின் ஏர்ப் பின்னது உலகம்’ என்பதை மானுடம் மீண்டும் அறிந்து கொள்ள மீண்டும் ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

‘விவசாயி’ என்றால் ஏளனம். விவசாயத்தை அழிக்கும் ஹைட்ரோ கார்பன் உள்ளிட்ட திட்டங்கள்! எட்டுவழிசாலைகள்! நியுட்ரினோ மையம்..

உதவும் உள்ளம் படைத்த விவசாயியை கொள்ளையடிக்கும் இடைத்தரகர்கள்.

உழுதவன் கணக்குப்பார்க்க உலக்கையும் விஞ்சாத இழிநிலை. உரம், பூச்சி மருந்து உள்ளிட்ட இடுபொருள்களின் விலையேற்றம்!

விலைவாசியைக் கட்டுப்படுத்துகிறோம் என்ற பெயரில் விளைபொருளுக்கு அரசின் உரிய விலை இல்லாத நிலை.

ரியல் எஸ்டேட் மாபியாக்களால் திட்டமிட்ட உருவாக்கப்படும் கான்கிரிட் காடுகள்!

ஆற்றுநீரை முறையாக பங்கிடாமல் டெல்டாவை அழிக்கும் இழிநிலை. வேளாண்குடிமக்கள் மட்டுமல்ல.. அதனைச் சார்ந்த அனைத்து தொழில்களுமே அழியும் நிலை.

ஆட்பற்றாக்குறையிலும் உணவுப் பற்றாக்குறை ஏற்படாமல் காக்கும் விவசாயத்தின் இன்றியமையாமையை, கொரோனாவுக்காக நாம் வீட்டில் பதுக்கி வைத்திருக்கும் அரிசி மூட்டைகளிலும் பிரிட்ஜ்களில் குளிர வைத்திருக்கும் காய்கறிகளிலும் உணர்ந்து கொள்ள முடியும்.

**சிந்தனைக்கு**

விவாசயத்தைப் பாதுகாக்க நான் என்ன செய்ய வேண்டும்?

விவசாயியின் வேதனையைப் புரிந்துகொண்டு அவர்களுக்கு உரிய விலையைக் கொடுத்து கொள்முதல் செய்கிறேனா?

விவசாயத்தைக் காக்க முன்னெடுக்கப்படும் போராட்டங்களில் என் பங்களிப்பும் பங்கேற்பும் என்ன?

**செபம்**

இயேசுவே! சீரேனே ஊரைச் சேர்ந்த சீமோன் உமக்கு உதவி உம்முடைய சிலுவைப் பயணத்தை இலகுவாக்கியதுபோல, நாங்களும் பாதுகாப்புத் தேவைப்படும் சமூகத் தொழிலான விவசாயத்தைப் பேணி பாதுகாத்து, விவசாயிகளின் இன்ப துன்பங்களில்

பங்கேற்று அவர்களுக்கு நம்பிக்கை தர தாரும் – ஆமென்.



# வெரோணிக்காள் இயேசுவின் முகம் துடைக்கிறார்.



## “துணியும் துணிவும்!”

கையில் துணியோடும் மனதில் துணிவோடும் முன்னேறுகிறாள் வீர மங்கை வேராணிக்கா.

கூட்டத்தைக் கண்டு பின் வாங்கவில்லை.

படைவீரனைக் கண்டு பயப் படவில்லை.

சாட்டையைக் கண்டு பதுங்க வில்லை.

தலைமைச் சங்கத்தாரைக் கண்டு மாறுவேடம் பூணவில்லை.

சாமானியப் பெண்ணாக, சாமானியனின் வாழ்வில் நம்பிக்கையை விதைத்து அவனுக்கும் அங்கீகாரம் தந்து அரவணைத்து, அவனோடு உண்டு உறவாடி உறங்கி எழுந்து, ‘இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று’ என்று நலமளித்த இயேசுவுக்கு, இந்த சாமானியப் பெண்மணி வெரோணிக்கா ஒடிவந்து உதவுகிறாள்.

அவருடைய சிலுவையை சுமக்க சீமோன் என்றால், அவருடைய களைப்பைப் போக்க, முகத்தைத் தாங்க இந்த வெரோணிக்கா.

இந்த உலகம் அன்பு நிறைந்த மனிதர்களால்தான் தன்னைத்தானே புதுப்பித்துக்கொள்கிறது.

‘அன்பு’ அறமாக இருப்பதால்தான், வாடியப் பயிரைக் கண்டபோதெல்லாம் வாடுகிற மனங்களால்தான் பூமி தன் அட்ச ரேகையில் இம்மியும் பிறழாமல் சூரியனைச் சுற்றிக் கொண்டே இருக்கிறது.

‘அன்பு’ எப்போதும் பதிலன்பையே விட்டுச் செல்லும். ‘முற்பகல் செய்யின் பிற்பகல் தாமாக வரும்.

கன்னத்தை அறைந்தவருக்கு மறுகன்னத்தையும் காட்டிய இயேசுவின் முகத்தைத் துடைத்து புத்துணர்வு தருகிறாள் இந்த வீரப்பெண்மணி.

ஈரம் நிறைந்த மனம்தான் வீரத்திற்கு அடித்தளம்.

முகம் பதிந்த அந்தப் புதுமையே அதற்கான அங்கீகாரம்தான்.

ஆம். ஈரம் நிறைந்த மனம்தான் வீரத்திற்கு அடித்தளம்.

கொரோனா ஈரம் நிறைந்த மனிதர்களாலேயே கட்டுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது.

மருத்துவர்கள்,

செவிலியர்கள்,

தூய்மைப்பணியாளர்கள்,

மருத்துவ ஆராய்ச்சியாளர்கள்,

முதல் பரிசோதனை மனிதர்கள்,

காவல்துறையினர்,

அரசு அதிகாரிகள்.

அருள்பணியாளர்கள்...இமாம்கள், பூசாரிகள், இவர்கள் அன்பின் அடையாளங்கள்.

‘தனக்கு என்ன நேர்ந்தாலும் அதைப் பற்றி கவலைப்பட மாட்டேன் ’ என்று நல்ல சமாரியனைப்போல, வெரோணிக்காவைப் போல, ‘கோவிட் 19’ தன்னைத் தாக்கலாம், தன் உயிரைப் பறிக்கலாம் என்று அறிந்திருந்தும், உண்ணாமல், உறங்காமல், உறவுகளைப் பார்க்காமல், ஒரு யோகியைப் போல உயிரைக் காப்பாற்றுவதை ஒரு தவம் போல கைக்கொள்ளும் இவர்கள் வானதூதர்களுக்கு நிகரானவர்கள்.

ஆம்! இவர்கள் கடவுளின் வானதூதர்கள்தான். வாழ்க அவர்கள்தம் தொண்டு.

**சிந்தனை**

தூய்மைப் பணியாளர்களை நான் அணுகுகிற விதம் எப்படி உள்ளது?


மருத்துவர்கள்,காவலர்கள் விடுக்கும்வேண்டுகோளை ஏற்று, சமூக விலகலைக் கடைப்பிடித்து நோய்த்தொற்று பரவாமல் உதவுகிறேனா?

**செபம்**

இறைவா, தங்கள் உயிரைப் பொருட்படுத்தாமல் கெரோனா நோயாளிகளின் உடல் நலத்திற்காக போராடும் மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள் மற்றும் காவல்துறையினரையும் அவர்கள் தம் குடும்பங்களையும் பாதுகாத்தருளும். ஆமென்.

# இரண்டாம் முறை இயேசு விழுகிறார்

## "பொருளாதார வீழ்ச்சி"



இயேசு, சிலுவையின் பாரத் தால் இரண்டாம் முறை கீழே விழுகிறார்.

சீமோன் உதவி செய்து கொண்டிருக்கிறபோதும்

தம் அம்மா ஊக்கப்படுத்திய போதும்,

வெரோணிக்கா வியர்வையைத் துடைத்து புத்துணர்வு தந்த போதும், இயேசு இந்த மானுடத்தின் பாவம் தந்த அழுத்தத்தால் இரண்டாம் முறையாக பூமியை முத்திமிடுகிறார்.

இன்றைய பொருளாதாரமும் இயேசுவைப் போலவே கீழே விழுந்து கிடக்கிறது.

கொரோனா நோய்த்தொற்று, உலக அளவில் பெருந்தொற்றாக மாறிய காரணத்தால், உலகப் பொருளாதாரமே சரிந்திருக்கிறது.

விமானப் போக்குவரத்து 60 விழுக்காடு குறைந்துள்ளது.

பங்குச் சந்தைகள் கரடியின் பிடிக்குள் சிக்கி, மள மளவென

சரிந்திருக்கின்றன.

பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள், இந்தியாவில் 40 கோடி அமைப்புசாரா தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

தொழிலாளர்களுடைய ஊதியம் குறைக்கப்பட்டிருக்கிறது.

ஏற்றுமதி-இறக்குமதி சரிந்திருக்கிறது.

வேலையில்லா திண்டாட்டம் பெருகியிருக்கிறது.

பெரும்பாலான தொழிற்சாலைகள் இயங்கவில்லை.

எதிர்காலம் சூன்யமாகவே தென்படுகிறது.

தற்கொலைகள் அதிகரித்துள்ளன.

சேமிப்பு கரைந்து கொண்டிருக்கிறது.

இஎம்ஐ கட்ட முடியவில்லை.

வட்டி, வாடகை, கட்ட முடியவில்லை. போட்ட முதலே முடங்கிபோயிருக்கிறது.

மத்திய அரசுக்கு ஐந்து லட்சம் கோடி இழப்பு என்கிறது ஒரு புள்ளிவிவரம்.

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மனிதருக்கு சொல்லவே தேவையில்லை.

நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார உற்பத்தி நான்கு விழுக்காட்டை எட்டுமா என்பதே முயற்கொம்புதான்.

இயேசுவைப் போலவே இந்தப் பொருளாதாரமும் வீழ்ந்து கிடக்கிறது. இது மீண்டும் எழுந்தால்தான் இயல்பு வாழ்க்கை திரும்பும். கொரோனா மனிதர்களை மட்டுமல்ல.. ஒட்டுமொத்த பொருளாதாரத்தையே சிதைத்திருக்கிறது.

**சிந்தனை**

என் தனிப்பட்ட மற்றும் பொருளாதாரத்தைத் திறம்பட நிர்வகிக்க நான் மேற்கொள்கிற நடவடிக்கைகள் என்ன?

அவசர காலத் தேவைக்காக நான் எதையாவது சேமித்திருக்கிறேனா?

**செபம்**

என் இறைவா, கடவுளுக்குரியதை கடவுளுக்கும் செசாருக்குரியதை செசாருக்கும் செலுத்த வலி யுறுத்தியதை உணர்ந்து, உமக்கும் எங்கள் வாழ்க்கைக்கும் தேவையானவற்றைத் திட்டமிட்டு, திறம்பட வாழ்க்கையைக் கட்டமைக்க வரம் தரும். -ஆமென்.

## எட்டாம் நிலை

# எருசலேம் மகளிருக்கு இயேசு ஆறுதல் கூறுகிறார்

### "ஆறுதல்"



"அழுதுகொண்டும் புலம்பிக் கொண்டும் மாரடித்துக் கொண்டும் கண்ணீரும் கம்பலையுமாக நின்று கொண்டு தனக்கு ஆறுதல் சொல்ல வந்து எருசலேம் பெண்களுக்கு, துன்பத்தின் மத்தியிலும் இயேசு தாமே ஆறுதல் சொல்லுகிறார்.

துயரத்தின் மத்தியிலும் 'எனக்காக அழ வேண்டாம்' என்று

கட்டளையிடுகிற துணிச்சல் இயேசுவுக்கு மட்டும்தான் உண்டு.

கெத்சமேனியில், ‘**எனக்காக** விழித்திருந்து ஒருமணி நேரம் உங்களால் செபிக்க இயலவில்லையா?’ என்று கொந்தளித்த இவர், ‘எருசலேம் மகளிரே.. **எனக்காக** அழ வேண்டாம். உங்களுக்காக.. உங்கள் பிள்ளைகளுக்காக.. அழுங்கள்’ என்று கேட்டுக் கொள்கிறார்.

ஆறுதல் பெறுவதுதான் சுகமானது. ஆறுதல் தருவது சற்றே கடினமான வேலைதான்.

இங்கே உடலுக்கான ஆறுதலைவிட உள்ளத்திற்கான ஆறுதல்தான் வலியுறுத்தப்படுகிறது.

‘ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் அளிக்கவே’ ஆற்றல் வேண்டி புனித பிரான்சிஸ் அசிசியார் மன்றாடுகிறார்.

அழுகைக்கு ஆறுதல்.. அழுவோருக்கு நம்பிக்கை.

கொரோனா நோய்த்தொற்றால் இன்று இறந்தவர்கள் மட்டுமே உலகில் 85000 பேர்.

ஏழை – பணக்காரன் வேறுபாடு இதற்கில்லை.

இருப்பவன் –இல்லாதவன் பேதமில்லை.

சாதி மதம் இதற்கில்லை.

மொழி–இனம் இதற்கில்லை.

கருப்பு–வெள்ளை தொற்றில் இல்லை.

ஆண்டியும் அரசனும் இதற்கு சமம்தான்.

நோய்த்தொற்றால் இறந்தவர்களின் இழவு வீட்டில் இருளே நிறைந்திருக்கிறது.

ஆறுதல் சொல்லவும் அருகே வரவும் மனிதர்கள் இல்லை.

தனித்திருக்கும் நோயாளிகளுக்கு தைரியம் தர

வார்த்தைகள் தேவை.

மரணத்தின் வாயிலில் சுவாசிக்கப் போராடுபவனுக்கு அருகிலிருக்கு சொந்த பந்தமில்லை.

முதுமையில் வாடுபவர்களுக்கும் மாற்றுத்திறனாளி களுக்கும் உணவுக்கு உதவிக் கரம் நீட்ட ஆட்கள் தேவை.

தெருவில் வாழும் மனிதர்களுக்கு தெம்பூட்ட உணவுத்தேவை.

தெருநாய்களுக்கும் பறவைகளுக்கும் வயிற்றை நிரப்ப உணவு தேவை.

வாட்ஸ் அப் வதந்திகளால் அல்லல் படுவோருக்கு சரியான தகவல் தர ஆட்கள் தேவை.

தற்கொலை எண்ணத்தோடு வாழ்வோருக்கு மனத்தெளிவு தர மன நல ஆலோசகர்கள் தேவை.

அணு ஆயுத வல்லரசு நாடுகளுக்கே மருந்தும் மருத்துவ உபகரணங்களும் தேவை.

‘எதிர்காலம்?!’ பற்றிய கேள்விகளோடு அழுபவர்களுக்கு ‘நம்பிக்கை’ தரும் மனிதர்கள் தேவை.

அரசியல் லாபமின்றி, ஒளிவு மறைவு இன்றி, வெளிப்படையாக மக்களின் தேவையறிந்து, மக்களால் மக்களுக்காகப் பணியாற்றும் அரசும் அரசு அதிகாரிகளும் உடனடி தேவை.

அழுவோருக்கு ஆறுதல்.. காலத்தின் தேவை.இது காலத்தே தேவை.

**சிந்தனை**

எனக்கு ஆறுதல் தேவைப்படாத பட்சத்தில் என்னைச் சுற்றி வாழும் மனிதர்களுக்கு ஆறுதல்

அளித்திருக்கிறேனா?

என் தேவைக்குப் போக அடுத்தவரோடு முடிந்தவரை பகிர்ந்துகொள்ள எனக்கு தடையாக இருப்பது என்ன?

யாருக்காவது இந்த தொற்றுநோய் காலத்தில் நம்பிக்கை அளித்திருக்கிறேனா?

**செபம்**

ஆறுதல் பெறுவதைவிட ஆறுதல் அளிக்கவும் பெற்றுக்கொள்வதைவிட பிறருக்கு கொடுக்கவும் எனக்கு வரம் தாரும் - ஆமென்.

**ஒன்பதாம் நிலை**

# மூன்றாம் முறை கீழே விழுகிறார்

## "சமூக இடைவெளி -மன்கி பாத்"

இயேசு மூன்றாம் முறையாக கீழே பாரமான சிலுவையுடன் விழுகிறார்.



நீர்வீழ்ச்சிதான் அருவியாக அறியப்படுகிறது.

மனுமகன் இயேசுவின் வீழ்ச்சி தான் மானுடத்தின் எழுச்சியாக அறியப்படுகிறது.

இவர் பலவீனத்தால் அல்ல.. நம்மீது கொண்ட பாசத்தால் கீழே விழுந்துகிடக்கிறார்.

'தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதே என் உணவு' என்று தன் கலோரியின் பரிமாணத்தை உணர்த்தியவர்,

இப்போது கீழே விழுந்து கிடக்கிறார்.

தாம் சோதிக்கப்படுபோது கோபுரத்தின் உச்சியிலிருந்து கீழே குதித்தால் ‘உன் கால் கல்லில் மோதாதபடி கடவுள்தம் தூதர்கள் தாங்கிக் கொள்வார்கள்’ என்று உரைத்ததை உணர்ந்து, அனுபவித்து இந்தப் பூமியை முத்தமிடுகிறார்.

இது திருஅவைக்கு மட்டுமல்ல..

நம் உலகத்திற்கே இது மாலை நேரம்தான். சோதனைக் காலம்தான்.

இருபத்தியொன்றாம் நூற்றாண்டில் இந்த 2020 மறக்கமுடியாத ஆண்டுதான்.

பல லட்சம் மைல்களுக்கு அப்பால் சந்திரனுக்கு சந்திராயனையும் செவ்வாய்க்கு (மார்ஸ்க்கு)மங்கள்யானையும் அனுப்பும் நம் இந்தியாவுக்கு, வயிற்றுக்குப் பிழைப்புத் தேடி வந்தவனைப் பாதுகாப்பாக அண்டை மாநிலத்திற்கு, ஆயிரம் மைல்களுக்குள் அவன் இருப்பிடத்திற்கு அனுப்பிவைக்க திராணியில்லை.

டிஜிட்டல் இந்தியாவில் எல்லாருக்கும் பாதுகாப்பு அளிக்க வக்கில்லை.

மணியடித்தும் கைத்தட்டியும் வெடிவெடித்தும் விளக்கேற்றியும் ஒற்றுமையை நிருபிக்க வேண்டிய நிலை.

கொரோனாவின் ‘ஊரடங்கு’ இந்தியாவின் சமூக இடைவெளியை வெளிச்சத்திற்கு கொண்டுவந்துள்ளது.

அம்பானிக்கு 28 சதவீத அளவிற்கு சொத்து சரிந்தது என்பதைவிட, அரைவயிற்று கஞ்சிக்கு வக்கில்லாமல், ஒரு சாக்குப் பையில், ஒரு கட்டைப் பைக்குள், தன் ஒட்டுமொத்த உடைமையைக் கட்டி முடிச்சிட்டு, மூச்சிரைக்க, தாகத்திலும் பசியிலும் 300, 600, 1000 கிலோமீட்டர் நடந்து நிருபித்த இந்த

ஏழைகள்தான் இந்தியாவின் மன்கி பாத். மனதின் குரல்.

வறுமைக் கோட்டின் தொலை தூர எல்லை. சமூக இடைவெளி என்பதைவிட சமூகப் பாதாளத்தின் உச்சம்.

ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையிலான தூரம் ஆபிரகாம் மடிக்கும் லாசரைக் கண்டுகொள்ளாத பணக்காரனுக்குமான தூரம்.

இந்தியா மட்டுமல்ல.. உலகமே இப்படித்தான் வீழ்ந்து கிடக்கிறது. விழுந்த இயேசு எழுந்துவிடுவார்.

ஆனால், விழுந்த இந்த ஏழைகள் எழுவது கடினம். உன் உதவி தேவை.


**சிந்தனை**

கொரோனா, என்னை சமூகத்திலிருந்து மட்டும் விலகி வைக்கவில்லை. மாறாக, ஏழைச் சமூகத்தையே என்னிடமிருந்து விலக்கி வைத்திருக்கிறதே. என்ன செய்யப் போகிறேன்?.

**செபம்**

இயேசுவே, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவதைப் போல ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையிலான இடைவெளியில், இன்றையப் பொருளாதாரம் கட்டமைக்கப்படுவதை மாற்றி, எல்லாருக்குமான வளர்ச்சியை அரசும் நானும் செயல்படுத்த வரம் தாரும் – ஆமென்.

# இயேசுவின் ஆடைகளைக் களைகிறார்கள்



## "நிர்வாணம்"

இயேசுவின் ஆடைகள் களையப்படுகின்றன.

ஒரு மனிதருக்கு மிகப்பெரிய அவமானமே அவன் தன் ஆடைகள் களைப்படுவதுதான்.

நாகரிகம் மனிதனுக்கு தந்த பரிசும் பகுத்தறிவு மனிதனுக்கு மிகப் பெரிய கொடையும் இந்த ஆடைகள்தான்.

'ஆள்பாதி ஆடைபாதி' என்பதே அதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

தன் தாய் தனக்கு ஆசை ஆசையாய்ட நெய்த ஆடையை இயேசு பறிகொடுக்கிறார்.

பறிக்கப்பட்ட ஆடையை ஓர் ஏழைக்கு கொடுத்திருந்தால்கூட இயேசு பூரித்திருப்பார். ஆனால், இங்கே படைவீரர்கள் ஏலம் போட்டு தங்களுக்கு பகிர்ந்து கொள்வதை அவர் ஏற்றுக்கொள்வது சற்றே கடினம்தான்.

தன் மானம் பறிபோன நிலையிலும் இயேசு தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற ஆசையாக இருக்கிறார்.

தன் தாய் மரியாவுக்கும் தனக்கும் இடையில் பிணைத்திருந்த அந்தத் தொப்புள்கொடி பிறந்த பிறகு அன்று அறுக்கப்பட்டது. அதேத் தாய் அவர் மானம் காக்க கொடுத்த ஆடை அவர்தம் உடலிலிருந்து இன்று களையப்படுகிறது.

அந்தத்தாயின் அன்பு அளப்பரியது என்பதை பிறப்பில் அறுக்கப்பட்ட அந்தத் தொப்புள்கொடி மட்டுமல்ல.. மரணத்திற்கு சற்று முன்பு பிடுங்கப்பட்ட இந்த ஆடையும் எண்பிக்கிறது.

கொரோனா பலருடைய வாழ்வை மட்டுமல்ல.. அவர்களின் வாழ்வாதரத்தையும் சேர்த்தே பறித்திருக்கிறது.

மரங்களைப் போல அவர்கள் வேரோடும் வேரடி மண்ணோடும் அகற்றப்பட்டிருக்கிறார்கள். வேலை செய்த இடங்களிலிருந்து சுவடுகளே தெரியாமல் அகற்றப் பட்டிருக்கிறார்கள்.

மீண்டும் பணியமர்த்தப்படுவார்களா என்பது சந்தேகமே.

வெளிநாடுகளில் பணியாற்றியவர்கள், படித்துக் கொண்டிருந்தவர்கள் தாய்நாட்டிற்கு கனவுகளைத் தொலைத்து விட்டு வந்திருக்கிறார்கள்.

வெளிநாடுகளில்தங்கி மீன்பிடித்துக்கொண்டிருந்தவர்கள் அனைத்தையும் விட்டு விட்டு உயிர் பிழைத்தால் போதும் அடைக்கலம் தேடியிருக்கிறார்கள்.

‘உயிர் பிழைத்தால் போதும்!’ என்பதுதான் இன்று எல்லோருக்குமான ஒற்றுமை. எல்லாருக்குமானச் சிந்தனை. கவலைஸ!

எல்லாரும் எல்லாரையும் தீவிரவாதியைப் போல பார்க்கும் நிலையை இந்தத் தொற்றுநோய் உருவாக்கியிருக்கிறது.

ஆளை மட்டுமல்ல.. ஆடையைக்கூட தீண்டத்தகாத தாகவே மாற்றியிருக்கிறது.

இதுதான் காலத்தின் கொடுமை.

இந்தத் தொற்று, பற்றற்ற வாழ்க்கையை நமக்குக் கற்றுத்தருகிறது.

**சிந்தனை**

வாழ்வாதாரம் இழந்தவர்களுக்கு என்னால் எப்படி உதவ முடியும்?

நானே ஒருவேளை வாழ்வாதாரம் இழந்திருந்தால், எனக்கு நானே எப்படி நம்பிக்கையை வளர்த்துக்கொள்வேன்?

**செபம்**

ஆண்டவரே, வாழ்வாதாரம் இழந்து, எதிர்காலத்தைப் பற்றிய அச்சத்தின் பிடியில் இந்நொடிப்பொழுதில் நம்பிக்கையில்லாமல் இருக்கும் குடும்பங்களுக்கும் மாணவர்களுக்கும் நம்பிக்கையை விதைத்து எதிர்நீச்சல் போடும் ஆற்றலைத்தர மன்றாடுகிறோம். ஆமென்..

**பதினொன்றாம் நிலை**

# இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்

## "மூன்று ஆணிகள்"


சுமந்தவரையே சுமக்கும் சிலுவை.

அச்சிலுவையே, அவரைக் சுமக்க அடிக்கப்படுகின்ற மூன்று

ஆணிகள்.

ஆம். மூன்று ஆணிகளுக்குள் முடக்கப்படும் ஆண்டவர்.

ஐயாயிரம் பேருக்கு அப்பத்தைப் பலுகி பெருகச்செய்தி பசியாற்றிட பரிமாறிய கரங்கள்,



வீசியகாற்றையும்கொந்தளித்த கடலையும் அடக்கிய கரங்கள், 'நானும் தீர்ப்பிடவில்லை இனி பாவம் செய்யாதே!' என்று விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண்ணை தீர்ப்பிடாமல் மண்ணில் பதிந்த விரல்கள்,

கிழக்கும் மேற்குமாக, தெற்கும் வடக்குமாக இறையாட்சியை அறிவிக்க விரைந்த பாதங்கள்!...

இதோ! ஆணிகளுக்குள் அறையப்படுகின்றன.

இரு கரங்களும் இரு கால்களும் ஆக நான்கும் மூன்றில் அடங்கிவிடுகின்றன.

வலப்புறமும் இடப்புறமும் பக்கபலமாக இரு கள்வர்கள்.

மூன்று சிலுவைகள். 'மண்டை ஓடு' என்றழைக்கப்படும் கொல்கொதா- மரணத்தின் நுழைவாயில்.

கொரோனா.. இன்று இந்த மானுடத்தை மூன்று ஆணிகளுக்கு அறைந்திருக்கிறது.

## முதல் ஆணி. இறைநம்பிக்கை.

படைத்தவனை மறந்து, ஆலயம் துறந்து, செபம் மறந்து,

அருளடையாளங்கள் ஏழும் துறந்து, பரபரப்புடன் பணத்துக்குப் பின் இயங்கிக் கொண்டிருந்த மனிதர்கள் இன்று 'இறைமை' முதலாவது ஆணிக்குள் முடக்கப்பட்டிருக்கிறார்கள்.

நோய்த்தொற்றுக் காரணமாக ஆலயங்களில் வழிபாடு இல்லாமல் இருக்கலாம்.

மசூதிகளில் தொழுகை இல்லாமலிருக்கலாம்.

கோயில்களில் பூஜை புனஸ்காரம் ஓய்ந்திருக்கலாம்.

ஆனால், எல்லாருமே உள்ளுக்குள் உள்ளத்திற்குள் கடவுளைத் தேடுகின்றனர். கடந்து உள்ளிருக்கிறவனை நினைந்து நெக்குருகுகின்றனர்.

## இரண்டாவது ஆணி. அன்பு.

இந்த உலகில் இதுநாள் சுயநலமும் ஆணவமும்தான் கொரோனாவைப் போல கண்ணுக்குத் தெரியாமல் நீக்கமற நிறைந்திருந்தன.

'நான்' என்ற அகங்காரமும் 'எனது' என்ற மமகாரமும் எல்லாருக்குள் பூத்திருந்தது.

கொரோனா, இன்று பசியோடியிருப்பவனை அடையாளம் புசிக்க செய்திருக்கிறது.

ஆடையின்றி இருப்பவனை உடுத்தியிருக்கிறது.

களஞ்சியத்தை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டுவேன் என்று மனக்கோட்டைக் கட்டியிருந்தவனை 'தானம்' செய்ய வைத்திருக்கிறது. ஆடம்பர திருமணத்திற்கு வழியில்லை. கொண்டாட்டங்களுக்கு இடமில்லை. சகமனிதனை, சகமனிதனாகப் பார்க்க கற்றுக்கொடுத்திருக்கிறது. தொலைந்துபோனவன் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறான். பொதுவுடைமை பூமியெங்கும் தற்காலிகமாகப் பூத்திருக்கிறது.

## மூன்றாவது ஆணி. சுயம்.

ஓடிக்கொண்டேயிருந்தவன் ஓய்வெடுக்கிறான்.

இந்த 'ஓய்வு' அவனுக்காக ஆய்வுக்களத்தைத் திறந்திருக்கிறது. நான்கு சுவர்களுக்குள், 'நான் யார்?' 'நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன்?' 'என் பலம் என்ன? பலவீனம் என்ன?' ஆஹா..விடை தெரிந்து கொள்ள வேண்டிய எத்தனைக் கேள்விகள்???

இது ஒவ்வொருவருக்குமான சத்தியசோதனை.

உள்நோக்கிய பயணத்திற்கான உன்னதப்பாதை.

சுயபரிசோதனைக்கான உடனடி - ராப்பிட்(Rapid) சோதனைத் தருணங்கள் நிறையவே உண்டு.

**சிந்தனை**

இனியாவது படைத்தவனை உள்ளன்போடு தேடுவாயா?

பக்கத்திலிருப்பவனுக்கு அருகில் இருப்பாயா?

காணாமல் போன உன்னைத் தேடி மீட்டெடுப்பாயா?

**செபம்**

நாங்கள் சுமக்கும் மூன்று ஆணிகளும் என்னைக் என்னோடும் என் கடவுளை என்னோடும் என் சக உயிரை மாண்போடும் இணைத்து, மதித்தொழுக,ஒரு நடமாடும் கோயிலாக நானிருக்க எனக்கு வரம் தாரும்.
- ஆமென்.

# இயேசு சிலுவையில் தன் உயிரைக் கையளிக்கின்றார்

## “ம-ரணம்”



மரணம்- இது நம்மை அச்சுறுத்தும் நிலையல்ல. மாறாக அது ஞானத்தின் உறைவிடம்.

கண்டவர் விண்டிலர் என்பதும் விண்டவர் கண்டிலர் என்பதும் அதன் மையப்புள்ளி.

வாழ்க்கை மீது ஒரு பிடிப்பு ஏற்படுவதற்கு மரணமே மட்டுமே அடித்தளமாகிறது.

சருகுகள் விழுந்தால்தான் கொழுந்துகளுக்கு குதுகாலம் பிறக்கும். முடிவேயில்லாத நதியும் கரையில்லாத கடலும் இயற்கைக்கு முரணாகும்.

வாழ்க்கை மீது சலிப்பை ஏற்படுத்தாமல் நம்மை இயல்பாக இயக்குவிப்பது நம் முடிவுதான். மரணம்தான்.

தன் தாய்க்கும் தனது சீடனுக்கும் இடையிலான உறவுகளைப் பூக்கச் செய்து, தந்தையின் விருப்பத்திற்கு தம்மையே கையளித்து, நமக்குக் கனி தர, அவர் விதையாக கீழே விழுகிறார்.

‘உம் கையில் ஒப்படைக்கிறேன்’ என்று தன் ஆவியை

ஒப்படைத்தவர், உலகின் பாவம் போக்கும் செம்மறியாக உயர்ந்து நிற்கிறார்.

பாலைநிலத்து கொள்ளிவாய்ப் பாம்புகளின் கொடிய நஞ்சால் கடியுண்டு மரணத்தின் வாயில் போராடுபவர்கள் அனைவருக்கும் மோசே செய்த வெண்கலப்பாம்பு நலமளித்ததுபோல (எண் 21:4-9) சிலுவையில் அறையுண்ட இந்த மெசியாவை உற்று நோக்கும் எவரும் நலமடைவர்.

மருத்துவர்களை அடையாளப்படுத்தும் சின்னமே அந்த வெண்கலப் பாம்பின் அடையாளம்தான்.

கொரோனா தாக்கப்பட்ட நோயாளிகளின் நுரையீரலில் உள்ள காற்றுப்பைகள் அடைக்கப்பட்டு, சுவாசிக்க முடியாமல் மரணத்தோடு போராடுவதை நாம் அறிவோம்.

இயல்பாகவே நோய் எதிர்ப்புத்திறன் குறைந்தவர்கள் சூறையாடப்படுவதை நாம் அறிவோம்.

மரணப்படுக்கையில் போராடும் அவர்களுக்கும் அது கொல்கொதா-தான்.

ஆகையால் இன்று, இம்மணித்துளியில் மரணப் படுக்கையில் உயிரை விடும் கொரோனா நோயாளிகளுக்காக மௌனித்துச் செபிப்போம்.

**சிந்தனை**

மௌனம் மட்டுமே.. மௌன அஞ்சலி 60 விநாடிகள்.

**செபம்**

கொரோனா நோய்த்தொற்றின் காரணமாக இறந்தவர்களுக்கு பேரின்ப வாழ்வை அளித்தருளும் ஆண்டவரே.. முடிவில்லா ஒளி இவர்கள் மேல் ஒளிர்வதாக. -ஆமென்.

# இயேசுவின் உடலை மரியின் மடியில் கிடத்துகிறார்கள்



**“மருந்து ஆராய்ச்சியாளர்கள்”**

மரணத்தை வெல்ல இன்றுவரை மருந்து கண்டுபிடிக்கவில்லை.

மரணம் மட்டும்தான், படைப்பின் சிகரமான மனிதனை மௌனிக்கச் செய்ய முடியும்.

சிலுவையில் உயிர்விட்ட இயேசுவின் உடல் தாயின் மடியில் கிடத்தப்படுகிறது.

உதரத்திற்கு வெளியே ஒரு பாசப்போராட்டம்!

தந்தையின்றி இந்த உலகில் பிறந்தவர், தந்தையின்றியே இறந்தார்.

தாயின்றி இந்த உலகில் பிறக்க இயலாதவர், தாயின்றி இந்த உலகில் இறக்க இயலவில்லை என்பதுதான் நிதர்சனம். உண்மை.

உதரத்திற்குள் கருத்தரிப்பதற்கு முன்பே, உள்ளத்தில் கருத்தரித்தவள் (நன்றி-புனித அகுஸ்தீன்) அந்த உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவ இப்போது அனுமதிக்கிறாள்.

ஏழு துயர்நிலைகளுமே ஆறுதல் சொல்ல இயலாதவை.

அன்னைதான் ஆறுதல்தருபவள். அம்மா என்றாலே ஆறுதல்தான்.

அந்த அன்னைக்கே ஆறுதல் தர நம்மால் ஒருபோதும் இயலாது.

ஐயிருத் திங்கள் தம் வயிற்றில் சுமந்தவள், ஓர் இறையடிமையாய் இயேசுவை மடியில் சுமக்கிறாள்.

அவள் இதயத்திற்குள் எப்போதும் ஈரம் சுமக்கிற காரணத்தினாலேயே அவள் படைப்பனைத்திற்கும் தாயாக நம்பிக்கை தருகிறாள்.

(நேரம் கிடைத்தால் திருத்தந்தை கொரேனோ பாதிக்கப்பட்ட இந்நேரத்தில் செபித்த அன்னை மரியாவை நோக்கிய மன்றாட்டைச் செபிப்போம்).

அன்னை மரியாவின் கையறுநிலையில்தான் இன்றைய மருத்துவமும் மருந்து ஆராய்ச்சியும் உள்ளது.

மருத்துவ ஆராய்ச்சியாளர்களுக்கு மிகப்பெரிய ஆச்சரியமே இந்த கோவிட் 19-வைரஸின் அமைப்பும் செயல்முறையும்தான்.

தனக்கென குரோமோசோம்களைக் கொண்டிராமல் ஒற்றை ஆர்என்ஏ முறையில் அமைந்துள்ள இது எடுக்கிற ஒவ்வொரு வேஷமும் விஷமத்தனமானது.

‘முடிசூடிய’ இந்த கொரோனாவுக்கு மருத்துவத்தால் முள்முடி சூட முடியவில்லை.

‘தடுப்பு மருந்து’ இன்னும் சோதனை முயற்சியிலேயே நீடிக்கிறது. ‘கோவிட் -19’ வைரஸ் எடுக்கிற ஒவ்வொரு அவதாரமும் மானுடத்தின்மீது தொடுக்கப்படும் மிகப்பெரிய அஸ்திரமே.

தன் மகனை மடியில் சுமந்து கையறுநிலையில் கதறும் அன்னை மரியாவைப்போலவே மருத்துவர்களும், மருந்து ஆராய்ச்சியாளர்களும் 90 ஆயிரத்திற்கும் அதிகமான உயிர்களைக் காப்பாற்ற முடியவில்லையே என்று இன்றும் உடல்களோடு சொல்லொண்ணா துயரில் அல்லாடுகின்றனர்.

**சிந்தனை**

என் உடல் மீது நான் கொண்டிருக்கும் மதிப்பீடு என்ன?

என் உடல் - தூய ஆவியாரின் ஆலயம் என்பதை உணர்ந்து மதித்து நடக்கிறேனா?

என் சுகாதாரத்தையும் சுற்றுப் புறத்தையும் பேணுவதுற்கு நான் எடுக்கும் முயற்சிகள் என்ன?

**செபம்**

ஆண்டவரே, உலகமெங்கும் உள்ள பல்லாயிரக்கணக்கான மருந்து ஆராய்ச்சிக் கூடங்களில் கொரோனாவுக்கு உரிய தடுப்பு மருந்தையும் நோயிலிருந்து குணமடைவதற்கான மருந்தையும் விரைவில் கண்டறிந்து இம்மானுடத்தைக் காப்பாற்ற அருள்புரியும். - ஆமென்.

# இயேசுவின் உடல் நல்லடக்கம் செய்யப்படுகிறது



**“கல்லறை”**

“அரிமத்தியா யோசேப்பின் கல்லறையில் இயேசு அடக்கம் செய்யப்படுகிறார்.

‘தலைசாய்ப்பதற்கும் இடமில்லாதவர்’ அந்நியனின் கல்லறையில் புதைக்கப்படுகிறார்.

நிக்கதோமு அடக்கத்திற்கு தேவையான நறுமணப் பொருள்கள் கொடுத்து உதவுகிறார்.

இயேசு புதைக்கப்படவில்லை. மாறாக, விதைக்கப் படுகிறார்.

அதுவும் மாலைவேளைதான். ஆனால் உயிர்ப்பு நிறைந்த மாலைவேளை. நம்பிக்கைப் பூக்கும் நலமான வேளை.

அரிமத்தியா யோசேப்பு தமக்கென வெட்டியிருந்த கல்லறை.

ஒரு முன்தயாரிப்பு மிக்க வாழ்க்கை முறைக்கு உதாரணம்.

இவரின் ‘தியாகம்‘ என்பதைவிட இவர் இயேசுவின் மீது கொண்ட ‘நம்பிக்கையே’ பாராட்டுக்குரியது. அவர் ‘இயேசுவின்

சீடர்' என்பதில் பெருமைக் கொண்டார்.

இயேசு நிச்சயம் உயிர்ப்பார், அவர்தம் உயிர்ப்பிற்குப் பிறகு அந்தக் கல்லறை நம்பிக்கையின் கருவறையாக மாறும். அப்படி

மரணத்தை வென்றவர் தனக்கு மறுவாழ்வு அளிப்பார் என்று நமபியிருப்பாரோ?!

அந்தக் கல்லறையில் தானும் ஒருநாள் இறந்தபிறகுஅடக்கம் செய்யப்படக்கூடும் என்ற உயிர்ப்பின் மீதான நம்பிக்கைக் கூட அந்தக் கல்லறையை தன் குருவுக்கு கொடையாக அளிக்க தூண்டியிருக்கலாம்.

கல்லறை முன்பு மௌனமும் கண்ணீரும்தான் பேசும்.

கொரோனா நோய்த்தொற்றால் இறந்தவர்களின் கல்லறைகள் இதற்கு விதிவிலக்கல்ல.

பூக்களில்லாத கல்லறை, மேளதாளமில்லாத அடக்க முறை, இரங்கல் செய்தி வாசிக்க கூட ஆட்களில்லை!

எங்கும் அதிருப்தி, துக்கம், துயரம், மயான அமைதி,கையறுநிலை.. கவலை, பயம், கண்ணீர்.. .. கடவுள் மீதே கோபம், இறை இருப்பின்மீதே சந்தேகம்..நான் மட்டும் ஏன் உயிருடன் இருக்கிறேன்? என்ற விரக்தி, இனி என்ன செய்யப் போகிறேன்? என்ற பயம்.. அப்பப்பபா ... விவரிக்க வார்த்தைகளில்லை.

'மானுடமே.. அஞ்சாதே!.. 'இதுவும் கூட கடந்து போகும்'. இயேசு உயிர்ப்பார். கல்லறை வெறுமையாகும்.

நம்பிக்கை மீண்டும் வரும். ஆம்! மீண்டும் வரும்.

மனந்திரும்பு. மகிழ்ச்சி உனதாகும். மகிழ்ச்சியே நீயாவாய்.

### சிந்தனை

புண்ணியம் தேட, பொழுது விடியட்டும் என்று காத்திருக்க வேண்டாம். மாறாக மற்றவருக்கு வாழ்வைக் கொடுக்க, வாழ்வாக மாற எப்போதும் தயார் நிலையில் இருப்போம்.

### செபம்

இறைவா கொரோனோ தொற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களை அடக்கம் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள கல்லறைப் பணியாளர்களையும் அவர்கள்தம் குடும்பங்களையும் இந்நோய்த்தொற்றிலிருந்து பாதுகாத்தருளும்.

## *அனைவருக்கும் திருச்சிலுவை ஆசீர்*

*அன்பார்ந்த திருக்குடும்பமே...*

***ஓர் அன்பான வேண்டுகோள்!***

*இந்த ஆன்மிகச் சேவையைச் செய்து உதவிய '**நம் வாழ்வு**' வார **இதழுக்கு** உதவுங்கள். இன்றே கிறிஸ்தவர்களின் ஒரே வார இதழான **நம் வாழ்வு**-ன் சந்தாதாரர்களாகுங்கள்.*

# மனம் திறந்து ஒரு பணிவான வேண்டுகோள்

## இன்றே ‘நம் வாழ்வு’ சந்தாதாரராகுங்கள்!

*For online payment:* www.namvazhvu.in/products

for Online Subscription Renewal

Amazon Pay
Google Pay
Paytm
Phone Pe
BHIM

AMZN0000286547@apl

Facebook

**அன்புள்ள சகோதரரே! சகோதரியே!**

தமிழக இறைமக்களின் ஒரே வார இதழான **‘நம் வாழ்வு’** வார இதழ் 45ஆம் ஆண்டில் அடியெடுத்துவைக்கிறது. ஜனநாயகத்தின் வலிமையான தூண்களில் ஒன்றான இப்பத்திரிகை, தமிழகத் திருச்சபை ஆயர்களின் வழிகாட்டுதலின்படி நல்ல வாசகர் பெருமக்களைத் தனக்கென்று கட்டமைத்திருக்கிறது. **‘நம் வாழ்வு’** – தமிழக இறைமக்களின் தனிப்பெரும் சொத்து; மிகச்சிறந்த ஜனநாயகக் கருவி; எழுத்துச் சுதந்திரத்தோடு திருச்சபையையும் இறைமக்களையும் பாதுகாக்கும் ஒரு கேடயம். நடுநிலைத் தன்மையோடு இதில் இடம்பெறும் அரசியல் கட்டுரைகள் ஒவ்வொன்றும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கின்றன; ஊழலையும் பெரும்பான்மைவாதத்தையும் கேள்விக்குள்ளாக்குகின்றன.

சமூகக் கட்டுரைகள் ஒவ்வொன்றும் சமத்துவத்தையும் சமாதானத்தையும் அறத்தையும் உயர்த்திப் பிடிக்கின்றன. இப்படி இறையாட்சிக்கான விழுமியங்களை விதைகளாக இவ்விதழ் ஒவ்வொரு வாரமும் விதைக்கிறது. வத்திக்கான்– ஆசிய – இந்திய – தமிழகத் திருச்சபை செய்திகள் ஒவ்வொன்றும் நாட்டு நடப்புகளையும் நடைமுறைச் செய்திகளையும் வீட்டு வாசலுக்குக் கொணர்ந்து ஆயனையும் ஆடுகளையும் இணைக்கின்றன. இதில் இடம் பெறும் திருவழிபாட்டுக் குறிப்புகளும் ஞாயிறு மறையுரைச் சிந்தனைகளும் புதிய முறையிலான கிறிஸ்தவ வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கின்றன. தமிழக ஆயர் பேரவையின் வழிகாட்டுதலின்படி, ஒவ்வொரு முதன்மையாசிரியரின் கடுமையான உழைப்பால், ஒவ்வோர் ஆறு ஆண்டுகளிலும் தமிழக இறை மக்களின் ஒரே வார இதழான **‘நம் வாழ்வு’** ஒவ்வொருபடி வளர்ந்து, ஊடக வெளியில் தனக்கென தனிக்கொள்கையுடன் பட்டொளி வீசுகிறது. உலக அளவில் கிறிஸ்தவர்களுக்கென்று வரும் ஒரே தமிழ் வாரப் பத்திரிகை இந்த **‘நம் வாழ்வு’** மட்டுமே..

தமிழக அளவில் கிறிஸ்தவ இதழியல் உலகில் **'நம் வாழ்வு'** மிகப்பெரிய சவால்களைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. மறைமாவட்டந்தோறும் வெளியிடப்படும் மாத இதழ்கள், திருத்தலங்களிலிருந்து வெளிவரும் மாத இதழ்கள், இயேசு சபை, சலேசிய சபை உள்ளிட்ட பல துறவற சபைகள் பெருமுதலீட்டில் நடத்தும் மாத இதழ்கள், குருக்களும் இறைமக்கள் சிலரும் தனித்து நடத்தும் மாத இதழ்கள், பங்குகளிலிருந்து வெளிவரும் மாத இதழ்கள், திருவழிபாட்டை மையப்படுத்தி, அருங்கொடை இயக்கங்கள் சார்பில் வெளிவரும் மாத இதழ்கள், தமிழக ஆயர் பேரவையின் பணிக்குழுக்கள் சார்பில் பதிப்பிக்கப்படும் இதழ்கள்... இப்படி எத்தனையோ இதழ்களுக்கு மத்தியில், 'தனித்து' தமிழக இறைமக்களின் தனிப்பெரும் வார இதழாக **'நம் வாழ்வு'** வார இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. இவ்விதழின் தரத்தை உயர்த்தி இதற் கென ஓர் எதிர்காலத்தை உருவாக்கிய முன்னாள் ஆசிரியப் பெருமக்களையும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் அச்சகத்தாரையும் நன்றி யோடு நினைவு கூருகிறேன்.

## நமது எதிர்காலம் 'நம் வாழ்வு' வார இதழின் கையில்

கிறிஸ்தவர்களைப் பாதுகாக்கும் கேடயமாக, ஜனநாயகக் கருவியாக, தமிழக ஆயர்களின் குரலாக, ஒட்டு மொத்த தமிழக இறைமக்களின் (அறப்) போர்வாளாக இருக்கின்ற **'நம் வாழ்வு'** வார இதழின் கையில் நமது தமிழகத் திருச்சபையின் எதிர்காலம் இருக்கிறது என்று கூட சொல்லலாம். இந்திய அரசியல் சாசனம் வகுத்தளித்துள்ள பத்திரிகை சுதந்திரத்தைப் பயன்படுத்தி, நம் தரப்பு நீதி நியாயங்களையும் வாதங்களையும் முன்வைக்க ஒரே தளம் **'நம் வாழ்வு'** மட்டுமே! அரசியல், சமூக மற்றும் உளவியல் கட்டுரைகளோடு திருச்சபைச் செய்திகள், ஞாயிறு வழிபாடு, அன்பிய வழிகாட்டி, ஞாயிறு மறையுரை, தமிழக பணிக் குழுக்களின் செயல்பாடுகள் என ஆன்மிகத்தையும் வேலைவாய்ப்புச் செய்திகள், இளைஞர் பக்கம், மருத்துவக் குறிப்புகள் என வாழ்வியலையும் **'நம் வாழ்வு'** தாங்கி வெளிவருகிறது. இவ்வாறு **ஆன்மிகத்தையும் அரசியலையும்** நம் தமிழகத் திருச்சபை இரு கண்களாகக் கொண்டு செயல்பட **'நம் வாழ்வு'** வழி காட்டுகிறது. பெரும்பான்மைவாதமும் இந்துத்துவ அடிப்படைவாதமும் வேகமாகப் பரவிவரும் இவ்வேளையில், தென்இந்தியாவில், நம் தமிழகத்தில் நமக்கென்று பாதுகாப்பு வளையங்களைக் கட்டமைப்பது போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கு **'நம் வாழ்வு'** களம் அமைக்கின்றது; அதன் ஒவ்வோர் எழுத்தும் உறுதுணையாயிருக்கும்! எழுத்துக்கள் எல்லாரையும் தட்டி எழுப்பும்!

## நம் வாழ்வுக்கு உதவுங்கள்!

ஒற்றை வார இதழாக 43 ஆண்டு காலமாக வெளிவரும் **'நம் வாழ்வு'** வார இதழ் தமிழகம் முழுவதும் ஏற்படுத்திய தாக்கம் அதிகம். ஆனால் **'நம் வாழ்வு'** தனக்கென

ஒரு நல்ல எதிர்காலத்தைக் கொண்டிருக்கிறதா என்றால் 'ஆம்' என்று சொல்ல மனம் ஒப்பவில்லை. தமிழக ஆயர்கள் 1976 ஆம் ஆண்டு இதனை ஆரம்பித்தபோதே, **'நம் வாழ்வு'** வார இதழ், மிக விரைவில் ஒட்டுமொத்தக் கிறிஸ்தவர்களின் நாளிதழாக மாறும் என்று கனவு கண்டார்கள்; இறை வாக்குரைத்தார்கள். ஆனால் வெறும் 15000 சந்தாதாரர்களோடு தனக்கென ஒரு சொந்த அச்சகம் கூட இத்தனை ஆண்டுகளாக இல்லாமல் தனியார் அச்சகத்திலிருந்து வாரந்தோறும் பெரும் பொருட்செலவில் வெளிவந்து கொண்டிக்கிறது. சொந்த அச்சகம் இல்லை. தமிழகத் தில் உள்ள 18 இலத்தின் ரீதி மறை மாவட்டங்களில் **கும்பகோணம், திருச்சி, தஞ்சை, குழித்துறை மற்றும் சென்னை – மயிலை ஆகிய மறைமாவட்ட ஆயர்கள் மட்டுமே,** தங்கள் தலத்திருச்சபையில் பணிபுரியும் குருக்களுக்கு **'நம் வாழ்வு'** வார இதழை சந்தா செலுத்தி அனுப்பி வைக்கிறார்கள்; பெரும்பாலான பங்குத் தந்தையர்கள் நம் வாழ்வை வாங்கி ஊக்குவிப்பதில்லை. தமிழகத்தில் உள்ள ஆண், பெண் துறவற சபைகளின் இல்லங்களில் நேரடியாகச் சந்தா செலுத் தும் துறவற இல்லங்களின் எண்ணிக்கை மிகவும் சொற்பமே! **எனவே இறைமக்களே! நீங்கள்தான் இவ்விதழை ஆதரிக்க வேண்டும்; தாங்கிப் பிடிக்க வேண்டும்.**

## 8 லட்சம் குடும்பங்களில் 15,000 குடும்பங்கள் மட்டுமே

ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். தமிழகத்தில் 18 மறை மாவட்டங்களில் ஏறத்தாழ 8 லட்சம் குடும்பங்கள் உள்ளன; தோராயமாக 40 இலட்சம் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் உள்ளனர். 2011 –தமிழக மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி 6.12% (கிராமங்களில் 4.29%, நகரங்களில் 8.08%) கிறிஸ்தவர்கள் உள்ளனர். முஸ்லீம்களைவிட வலிமை யான சிறுபான்மைச் சமூகமான நம் கிறிஸ்தவச் சமூகம், சமூக – அரசியல் தளங்களில் மிகவும் பின்தங்கியுள்ளது கண்கூடு. எனவே நம்முடைய அரசியல் சமூக உரிமைகளை வென்றெடுக்க நமக் கென்று உள்ள ஒரே ஜனநாயக ஆயுதம் **'நம் வாழ்வு'** மட்டும்தான். ஆனால் **'நம் வாழ்வு'** வாரந்தோறும் 15,000 பிரதிகள்தான் அச்சில் ஏறுகின்றன. 15,000 குடும்பங்கள் மட்டும்தான் (குருக்கள் துறவியர் உட்பட) **'நம் வாழ்வு'** இதழின் சந்தாதாரர்களாக உள்ளன. 8 இலட்சம் குடும்பங்களில் 1 லட்சம் குடும்பங்கள் கூடவா வறுமைக் கோட்டிற்கு மேல் வாழவில்லை?! குறைந்தபட்சம் 50 ஆயிரம் குடும்பங்களாவது?... இதை மன சாட்சியுள்ள கிறிஸ்தவச் சமூகம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். தமிழகம் முழுவதும் உள்ள 2985 கிறிஸ்தவ கல்வி நிறுவனங் களில் (மறை மாவட்டங்கள் 1611, துறவியர் 1374) பணிபுரிகின்ற ஆசிரியப் பெருமக்கள், பேராசிரியர்களின் பங்கேற்பு எங்கே? கல்வி தந்த கிறிஸ்தவச் சமூகம் இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கிறது. அடிப்படைவாதமும் பெரும்பான்மைவாதமும் தலை தூக்கும் இவ்வேளையில் நாம் **'நம் வாழ்வு'** வழியாக ஒன்றிணையாமல் இருப்பது ஏன்? இறை மக்களே தமிழக ஆயர்களின் குரலைக் கேட்காத மந்தையாக வாழ்வது ஏன்? அது எதிரிகளுக்கல்லவா பலம் சேர்க்கும்?!

## நம் வாழ்வு' சந்தாதாரராகுங்கள்!

சந்தாதாரர்களின் எண்ணிக்கை சராசரியைவிட மிகவும் குறைவாக இருப்பதால் வார இதழ் சந்திக்கும் நிதிப் பிரச்சினைகள் ஏராளம். சந்தாதாரர் களுடைய எண்ணிக்கை குறைந்தபட்சம் ஐம்பதாயிரத்தை எட்டினால்தான் **'நம் வாழ்வு'** இதழை நாளைய எதிர்காலத்தை நோக்கி நகர்த்த இயலும்; ஆனால் இருப்பதோ பதினைந்தாயிரம் சந்தா தாரர்கள்தான்! எப்படி கிறிஸ்தவர்களை வலிமையான சமூ கமாகக் கட்டமைக்க முடியும்?!! எனவே இதைப் படிக்கின்ற நீங்கள் கருணை கூர்ந்து இன்றே சந்தாதாரராகுங்கள்!

ஒவ்வொரு **'நம் வாழ்வு'** வார இதழும் அச்சகச் செலவு, பேப்பர் செலவு, அஞ்சல் செலவு, உடன் பணியாளர்களுக்கான சம்பளம், முகவர்களுக்கான ஊக்கத்தொகை, மின் கட்டணம் உட்பட அது சந்தாதாரரை வந்தடைகின்றபோது கையடக்கச் செலவு ரூ.14.75 ஆக உள்ளது. ஆனால் ஒவ்வொரு வாரமும் **'நம் வாழ்வு'** இதழை ரூ.10க்கு உங்களிடம் கொண்டுவந்து சேர்க்கிறோம். **ரூ.10 என்பது, ஒரே ஒரு டீ அல்லது காப்பி (Coffee) செலவுதான்.** ஆக 52 வாரங் களுக்கு ரூ.10 வீதம் ஓர் ஆண்டுச்சந்தா ரூ.500 மட்டுமே! இரண்டு ஆண்டுகளுக்கு ரூ.950. மூன்று ஆண்டுகளுக்கு ரூ.1400. ஐந்து ஆண்டுகளுக்கு ரூ.2300. ஆயுள் சந்தா ரூ.10,000 நான்கு தவணைகளில் செலுத்த லாம். இதற்கு மிக எளிதாக ஆன்லைன் வசதியும் உள்ளது. மணியார்டர், செக் வழியாகவும் செலுத்தலாம். **'நம் வாழ்வு' வார இதழை கிறிஸ்தவர்களாகிய நீங்கள் ஆதரிக்காவிடில் யார் இதனை ஆதரிப்பார்?** மசூதிகளுக்கு முன்பும் இந்து ஆலயங் களுக்கும் முன்பும் **'நம் வாழ்வு'** இதழைப் பற்றி பேச இயலாது. **'நம் வாழ்வின்** எதிர் காலம் உங்கள் கையில்தான் உள்ளது!

நாம் எது எதற்கோ எவ்வளவோ, செலவு செய்கிறோம்! இந்த ரூ.500 என்பது செலவு அல்ல; நம் எதிர்காலத்திற்கு நாம் இன்று செய்யும் முதலீடு! எனவே **'நம் வாழ்வு'** இதழைத் தொடர்ந்து வாசியுங்கள்! **'நம் வாழ்வு'**–க்கு வாழ்வு என்றால், அது நமக்கும் தான்! அதற்கு வீழ்ச்சி என்றால் அதுவும் நமக்கும் தான்!

**'நம் வாழ்வு' நமது வாழ்வு! நீ வாழ்ந்தாயெனில் நாங்கள் வாழ்வோம்! உனக்கு வீழ்ச்சியெனில்... எமக்கும்தான்! இனியொரு விதி செய்வோம்! அதை எந்நாளும் காப்போம்!**

வாசிக்கின்ற சமூகம்தான் உயிர்ப்போடு இருக்கும்! நிறைய வாசிப்போம்! வாழ்வின் நிறைவைக் காண்போம்! கிறிஸ்தவர்களே! **'நம் வாழ்வை'ப்** புரட்டுங்கள்! அது நிச்சயம் உங்களை உண்மையை நோக்கி வழிநடத்தும்! எனவே, இன்றே **"நம் வாழ்வு"** சந்தாதாரராகுங்கள்! நன்றி

என்றும் அன்புடன்,
**குடந்தை ஞானி,** ஆசிரியர் – **"நம் வாழ்வு"**
www.namvazhvu.in/products/ *பேச:* 94980 32244,
*எழுத:* editor@namvazhvu.in / subscription@namvazhvu.in

## நம் வாழ்வின் சந்தாதாரர்களாகுங்கள்!

## நீங்கள் எங்களுக்கு உதவலாமே!

ஜனநாயகத்தின் அரணாக, மதசார்பின்மையின் போர்வாளாக, சிறுபான்மையினரின் குரலாக, மீனவர்களின் துடுப்பாக, திருச்சபைச் செய்திகளின் தூதனாக, கத்தோலிக்க மக்களுக்குச் சேவகனாக, வழிபாட்டுக் களஞ்சியமாக, ஞானச் சுடராக, தமிழ்பேசும் கிறிஸ்தவர்களிடம் நீக்கமற நிறைந்திருக்கும் ஒரே வார இதழ் 'நம் வாழ்வு' மட்டுமே. ஆகையால் கீழே உள்ள படிவ விவரங்களைப் பயன்படுத்தி 'நம் வாழ்வு' சந்தாதாரர்களாகுங்கள். மேலும் விவரங்களுக்கு **visit: www.namvazhvu.in**

நல்லவர்களின் நாடித்துடிப்பு

# நம் வாழ்வு

62(153), Luz Church Road, Mylapore, Chennai – 600 004
Ph: 044-24670439, Cell: 87787 24533, Whatsapp: 94980 32244
Email :subscription@namvazhvu.in website: www.namvazhvu.in

**52 இதழ்கள்**

**நம் வாழ்வு சந்தா விவரம்**

| | |
|---|---|
| 1 வருடம் | ரூ.500 |
| 2 வருடம் | ரூ.950 |
| 3 வருடம் | ரூ.1400 |
| 5 வருடம் | ரூ.2300 |
| ஆயுள் சந்தா | ரூ.10,000 |

**நான் 'நம் வாழ்வு'** சந்தாதாரராக விரும்புகிறேன்..................

பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________

____________________

பின்கோடு : __________ மறை மாவட்டம் : __________

அலைபேசி : __________

E - mail : __________@__________

நம் வாழ்வு என்ற பெயரில் DD/ Cheque/ MO அனுப்பலாம். **For NEFT** Payment
*A/C Name:* **NAM VAZHVU** - *A/C Number:* **0149053000006878** IFSC Code: SIBL 0000149,
South Indian Bank, Mylapore. For further details :www.namvazhvu.in /Android App : namvazhvu
**மிகச் சுலபமாக www.namvazhvu.in/products என்ற இணைதள பக்கத்தில் நேரடியாகச் செலுத்தலாம்.**

20% Discount

நம் 'நம் வாழ்வு'—ன் புதிய தரமான வெளியீடுகள்

# ஈஸ்டர் பரிசாக வழங்க வாங்கிவிட்டீர்களா?

BOOKS WASH AWAY FROM THE SOUL the DUST of EVERYDAY LIFE

எல்லாப் பங்குத் தந்தையர்களும் துறவிகளும் படித்து மகிழ வேண்டிய அறிவுக் கருவூலங்கள்! இன்றே வாங்கி, படித்து, நன்மை பெற்றிடுங்கள்!

**A BOOK is a GIFT you can open again and again** - *Garrison Keillor*

உங்கள் பட்ஜெட் ஒருவருக்கு ரூ.900/— என்றால் ரூ.1110/— மதிப்புள்ள முத்தான பத்து நூல்களும் ரூ.900/— மட்டுமே..

பட்ஜெட் ரூ.900

உங்கள் பட்ஜெட் ஒருவருக்கு ரூ.500/— என்றால் இறைவாக்குப் பயணம் கிறிஸ்து வாழ்கிறார், திருப்பலி, ஒன்றே அப்பம் ஆகிய ரூ.620/— மதிப்புள்ள நூல்கள் ரூ.500/— மட்டுமே

பட்ஜெட் ரூ.500








**இறைவாக்குப் பயணம்** ஞாயிறு திருப்பலி மறையுரைகள்
அருள்முனைவர் ஜான்பாப்டிஸ்ட் — 640 பக்கங்கள்
விலை ரூ.400/—

மறையுரை ஸ்பெஷல்

விற்பனையில் சாதனை படைத்த நூல்கள்
கிறிஸ்து வாழ்கிறார் ரூ.150/—
விடிய விடிய ரூ.100/—
கடந்திட ரூ.100/—
தமிழர் வாழ்வியல் பெருமைகள் ரூ.120/—
யோக்கியர்கள் கவனத்திற்கு ரூ.150/—
ஆக ரூ.640/— மதிப்புள்ள தரமான இந்நூல்கள் ரூ.500/— மட்டுமே


பட்ஜெட் ரூ.500

**இறைவாக்குப் பயணம்**
ஈஸ்டருக்காக ரூ.300/— மட்டுமே

பட்ஜெட் ரூ.300




**திருப்பலி**
Sr.லில்லி மரி ME
பக்கம் 80
விலை ரூ.40/—



**ஒன்றே அப்பம்**
பேராயர் ஜார்ஜ் அந்தோனிசாமி
பக்கம் 56
விலை ரூ.30/—

நற்கருணை ஆண்டு ஸ்பெஷல்




**தமிழர் வாழ்வியல்**
அருட்திரு. ராஜசேகரன்
பக்கம் 208
விலை ரூ.120/—




இளைஞர் ஆண்டு ஸ்பெஷல்

**கிறிஸ்து வாழ்கிறார்**
திருத்தந்தை பிரான்சிஸ்
தமிழாக்கம் — பக்கம் 208
விலை ரூ.150/—




சமூகச் சிந்தனை ஸ்பெஷல்

**விடிய விடிய**
Fr. எம்.ஏ. ஜோ,சே.ச.
பக்.208
விலை ரூ.100/—




தவக்கால ஸ்பெஷல்

**கடந்திட**
13 சிலுவைப்பாதைகள்
*சத்தியநிலையத்தார்*
பக்.208 - விலை ரூ.120/—




அரசியல் ஸ்பெஷல்

**யோக்கியர்கள் கவனத்திற்கு**
Fr. ம. டைட்டஸ் மோகன்
பக்.304 - விலை ரூ.150/—

*நம் வாழ்வு வெளியீடு*
62, லஸ் சர்ச் ரோடு,
மயிலாப்பூர், சென்னை — 600 004.
044 - 24670439, 94980 32244.
E-mail: editor@namvazhvu.in
ஊக்கம்: திருவழிபாட்டுப் பணிக்குழு
திண்டிவனம்.
www.namvazhvu.in

நம் வாழ்வு
வெளியீடு

₹ விலையில்லா
'நம் வாழ்வு' பரிசு


ISBN 978-81-941643-7-1